# சிலாங்கூர் இன்று

இலவசம்

SMART SELANGOR

www.selangorkini.my Media_Selangor selangortv.my MediaSelangor

SELANGOR

திருவள்ளுவர் ஆண்டு 2053 / சுபகிருது வருடம் ஆவணி மாதம் ஆகஸ்ட் 8 / 2022 August 8 /2022


## முதல் சிலாங்கூர் திட்டம் நாட்டின் உற்பத்தித் திறனை மேம்படுத்தித்

# தனிநபர் வருமானத்தை அதிகரிக்கும்

ஷா ஆலம் :-
சிலாங்கூர் மாநிலச் சட்டமன்றக் கூட்டத்தொடரின் போது ஜூலை 27 அன்று, மாநிலத்தின் விரிவான முதல் சிலாங்கூர் திட்டத்தை (RS-1) தாக்கல் செய்து சிலாங்கூர் அரசாங்கம் வரலாறு படைத்தது. டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி, (RS-1) முதல்சிலாங்கூர் திட்டத்திற்கான ஒட்டு மொத்தச்சாதனை குறிகாட்டிகளாக 14 மைக்ரோகுறிகாட்டிகளை கோடிட்டுக் காட்டினார், செயல்படுத்தப் படும் அந்தமுன்முயற்சிகளின் செயல் திறனை மதிப்பிடஇந்தத் திட்டத்தில் நான்கு மூலோபாயக்கருப்பொருள்கள், ஐந்து கொள்கை வினையூக்கிகள் மற்றும் 19 கேம்-சேஞ்சர் திட்டங்களை உள்ளடக்கிய 262 முன்முயற்சிகள் உள்ளன என்று மந்திரி புசார் கூறினார்.திட்டத்தை வடிவமைக்க உதவும் நான்கு மூலோபாயக் கருப்பொருள்கள், பொருளாதாரத்தை வலுப்படுத்துவதில் கவனம் செலுத்தும்; சமூக உள்ளடக்கம் மற்றும் மக்களின் நல்வாழ்வை உறுதி செய்தல்; சுற்றுச்சூழல் நிலைத்தன்மையை இயக்குதல்; மற்றும் நல்ல மற்றும் பயனுள்ள நிர்வாகத்தை வழங்குதல்.

2025 ஆம் ஆண்டுக்குள் அடையப்பட வேண்டிய முக்கிய இலக்குகள், மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி (ஜிடிபி) ஆண்டுக்கு 6.5 முதல் 7.0 சதவீதம் வளர்ச்சி, முக்கிய மற்றும் அதிநவீனத் துறைகளுக்கு ஆண்டுக்கு 25 பில்லியன் ரிங்கிட் முதல் 35 பில்லியன் ரிங்கிட் வரையிலான முதலீடுகள் மற்றும் வேலை வாய்ப்புகளை உருவாக்குவது ஆகியவை ஆகும். அது 3.5 முதல் 3.8 மில்லியன் சிலாங்கூர் தொழிலாளர் சக்தியில் சுமார் 97 சதவீதத்திற்கு ஈடாகும்.

“2025 ஆம் ஆண்டிற்குள் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 30 சதவீதப் பங்களிப்பை வழங்க மாநில அரசு உறுதிபூண்டுள்ளது, அதே நேரத்தில் பொருளாதார வளர்ச்சிக்கும் அதன் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்குமான சம அளவு ஈடுபாட்டை வழங்க உறுதிகொள்கிறது இது சிலாங்கூரில் உள்ள சமூகப் பொருளாதார இடைவெளியை ஒழிக்க மக்களுக்கு நல்ல வாழ்க்கைத் தரத்தை வழங்கும், குறிப்பாக விரைவான நகரமயமாக்கலை அனுபவிக்கும் பகுதிகளில் என்று அவர் மாநிலச் சட்டமன்றக் கூட்டத்தில் கூறினார். ஐந்தாண்டுத் திட்டத்தை வெளியிடுகையில், மந்திரி புசார் அதன் இலக்கை அடைய, நிர்வாகம் மலிவு விலையில் வீடுகள் கிடைப்பது மற்றும் வாழக்கூடிய மாநிலம் என்ற கருத்தின் அடிப்படையில் பொதுச் சேவைகளைத் திறம்பட வழங்குவது உள்ளிட்ட சவால்களை எதிர்கொள்ளும் என்றார்.


தொடர்ச்சி 3-ஆம் பக்கம்





சுங்கை துவா சட்டமன்ற உறுப்பினரும் மாநில மந்தி புசாராக உள்ள டத்தோ ஸ்ரீ அமிருடின், கோலாலம்பூரில் நடைபெற்ற 33வது சர்வதேச வடிவமைப்பு, கண்டுபிடிப்பு மற்றும் தொழில்நுட்ப கண்காட்சி (iTEX) மூலம் நான்கு தங்கப் பதக்கங்களையும் சிறப்பு விருதையும் வென்ற ஊதுமு பத்துமலை தமிழ் பள்ளி மாணவர்களுக்கு RM5,000 சிறப்பு நன்கொடையை வழங்கி சிறப்பித்தார்.

## பி40 குடும்பங்களின் சுமையைக் குறைக்க ஆண்டுக்கு வெ.3,600 நிதியுதவி

ஷா ஆலம்:-
பணவீக்கம் மற்றும் வாழ்க்கைச் செலவின அதிகரிப்பினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவுவதற்காக பிங்காஸ் எனப்படும் சிலாங்கூர் நல்வாழ்வு உதவித் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் மாதம் 300 வெள்ளி அல்லது வருடம் 3,600 வெள்ளி பெறத் தகுதி பெற்றுள்ளனர் என்று மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

வருமானம் ஈட்டுதலும் சமூக சேவையும் குடும்ப வருமானத்தை மையமாக கொண்டுள்ளதோடு வறுமையும் வேலையில்லாப் பிரச்னையும் இன வேறுபாடின்றி அனைத்து நிலைகளிலும் உள்ளது என அவர் குறிப்பிட்டார். ஏழ்மையைக் குறைப்பது அடுத்த ஐந்தாண்டுகளுக்கான முக்கிய குறிக்கோளாக இருக்கும் என்று மாநில சட்டமன்றத்தில் இன்று முதலாவது சிலாங்கூர் திட்டத்தை தாக்கல் செய்த போது அவர் தெரிவித்தார்.

முதல் சிலாங்கூர் திட்டத்தின் வியூகத்தில் பிங்காஸ் மாற்றத்திற்கான உந்து சக்தியாக விளங்கும். அதாவது பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தி மக்களின் நல்வாழ்வை உயர்த்தும் என அவர் சொன்னார்.

கடந்த 2020 ஆம் ஆண்டு மலேசியாவில் இரண்டாவது உயரிய பயனீட்டாளர் விலை குறியீட்டை பதிவு செய்த மாநிலமாக சிலாங்கூர் விளங்குகிறது. கடந்த 2019 ஆம் ஆண்டில் அதிக பணவீக்கத்தை பதிவு செய்த மூன்றாவது மாநிலமாகவும் இது திகழ்கிறது என்றார் அவர்.

பிங்காஸ் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட 10 கோடியே 80 லட்சம் வெள்ளி நிதியின் வாயிலாக சுமார் 30,000 குடும்பங்கள் பயன்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.


பக்கம் 3 — இந்திய சமுதாயம் பயனடையுமா? முதல் சிலாங்கூர் திட்டத்தில்

பக்கம் 7 — கோ டிஜிட்டல் திட்டத்தின் வழி வெ.50,000 வரை வர்த்தக கடனுதவி

பக்கம் 10 — ம.இ.கா–வின் இரட்டை வேடம் தடுப்புக்காவலில் உள்ளவர்களுக்குச் சட்ட உதவியா?

# வான் போக்குவரத்து தொழில்துறை மையத்தை உருவாக்க

## சிலாங்கூர்-நெகிரி செம்பிலான் திட்டம்



ஷா ஆலம்:-

சிலாங்கூர்-நெகிரி செம்பிலான் எல்லையில் வான் போக்குவரத்து தொழில்துறை மையத்தை எதிர்காலத்தில் உருவாக்குவது தொடர்பில் அம்மாநிலத்துடன் சிலாங்கூர் அரசு ஒத்துழைப்பை நல்குவதற்கான சாத்தியம் உள்ளது.

இவ்விவகாரம் தொடர்பில் இதற்கு முன்னர் இரு மாநில ஆட்சிக்குழு உறுப்பினர்களுக்கிடையே அதிகாரப்பூர்வமற்ற பேச்சுவார்த்தை நடைபெற்றுள்ளதாக முதலீட்டுத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் டத்தோ தெங் சாங் கிம் கூறினார்.

கோலாலம்பூர் அனைத்துலக விமான நிலையத்திலிருந்து (கே.எல்.ஐ.ஏ) வெகு தொலைவில் இருக்கும் பராமரிப்பு, பழுதுபார்ப்பு மற்றும் நடவடிக்கை மையத்துடன் (எம்.ஆர்.ஒ.) இணைப்பை ஏற்படுத்துவது உள்ளிட்ட அம்சங்களில் கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளதாக அவர் சொன்னார். இந்த கூட்டுத் திட்டம் தொடர்பில் நானும் நெகிரி செம்பிலான் மாநில ஆட்சிக்குழு உறுப்பினரும் கருத்து பரிமாற்றம் செய்து கொண்டோம். எனினும் இதன் தொடர்பில் தீவிர விவாதம் எதுவும் நடைபெறவில்லை என்று அவர் தெரிவித்தார்.

எனது இந்த கருத்துக்கு ஆக்ககரமான அடித்தளம் உள்ளது. எனென்றால், நெகிரி செம்பிலானில் நிலத்தின் விலை குறைவு என்பதோடு மாநிலத்தின் எல்லையில் தொழிற்சாலையை நிர்மாணிப்பது சிக்கனமானது என்று அவர் கூறினார்.

மாநில சட்டமன்றத்தில் இன்று தாமான் டெம்ப்ளர் உறுப்பினர் முகமது சானி ஹம்சான் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையில் அவர் இவ்வாறு சொன்னார். இதனிடையே, கோவிட்-19 பெருந்தொற்றுக்குப் பின்னர் வான் போக்குவரத்து தொழில்துறைக்கு மீண்டும் உயிரூட்டுவது குறித்து சிலாங்கூர் வான் போக்குவரத்து தொழில்துறை ஒருங்கிணைப்பு அலுவலகம் பரிசீலித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

# பொது போக்குவரத்து பெருந்திட்டத்தின் கீழ்

## 12 இரயில் தடங்களை நிர்மாணிக்க மாநில அரசு திட்டம்

ஷா ஆலம்:-

இரயில் தடங்களை அடிப்படையாக கொண்ட 12 போக்குவரத்து வசதிகளை அடையாளம் காண்பதற்காக சிலாங்கூர் பொது போக்குவரத்து பெருந்திட்டத்தை மாநில அரசு தயாரித்துள்ளது. எனினும், மாநில அரசு சமர்ப்பித்த இந்த பரிந்துரை தொடர்பில் மத்திய அரசிடமிருந்து இதுவரை எந்த பதிலும் வரவில்லை என்று போக்குவரத்து துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் இங் ஸீ ஹான் கூறினார்.

இதன் தொடர்பான பரிந்துரை மற்றும் பெருந்திட்டத்தை 12வது மலேசியத் திட்டம் வாயிலாக நாங்கள் மத்திய அரசிடம் சமர்ப்பித்து விட்டோம். எனினும் அத்தரப்பிடமிருந்து இதுவரை எந்த பதிலும் வரவில்லை என்று மாநில சட்டமன்றத்தில் அவர் தெரிவித்தார்.

பண்டார் பாரு செலாயாங்கில் எம்.ஆர்.டி மற்றும் எல்.ஆர்.டி. இரயில் திட்டங்களை அமல்படுத்துவது குறித்து தாமான்



டெம்ப்ளர் உறுப்பினர் சானி ஹம்சான் எழுப்பிய கேள்விக்கு அவர் இவ்வாறு பதிலளித்தார்.எம்.ஆர்.டி. எல்.ஆர்.டி மற்றும் கொம்யூட்டர் எனப்படும் பயணிகள் இரயில் சேவையை பஸ்கள் மூலம் இணைக்கக்கூடிய வசதியை பண்டார் பாரு செலாயாங் பெற்றுள்ளதாக இங் ஸீ ஹான் சொன்னார்.

பொது போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்துவது அதிக செலவு பிடிக்கக்கூடியதாகவும் மத்திய அரசின் அதிகார வரம்பிற்குட்பட்டதாகவும் உள்ளதால் மாநில அரசு நிலையில் எல்.ஆர்.டி., எம்.ஆர்.டி. மற்றும் கொம்யூட்டர் சேவைகளை பண்டார் பாரு செலாயாங்கில் ஏற்படுத்துவதற்கான விண்ணப்பம் எதுவும் பெறப்படவில்லை என்றும் அவர் தெளிவுபடுத்தினார். மாநில அரசு உருவாக்கியுள்ள பொது போக்குவரத்து பெருந்திட்டத்தின் வாயிலாக தற்போது 20 விழுக்காடாக இருக்கும் பொது போக்குவரத்து பயன்பாட்டை வரும் 2030 ஆம் ஆண்டுவாக்கில் 60 விழுக்காடாக உயர்த்த முடியும் என்று மந்திரி புசார் கடந்த ஏப்ரல் மாதம் கூறியிருந்தார்.

# பி.ஜே.டி.லிங்க் நெடுஞ்சாலை- மேம்பாட்டாளரின் அறிக்கையை மாநில அரசு மதிப்பீடு செய்யும்

ஷா ஆலம்:-

பி.ஜே.டி.லிங்க் அடுக்கு நெடுஞ்சாலைத் திட்டத்திற்கு அனுமதி வழங்குவதற்கு முன்னர் அத்திட்டம் தொடர்பில் மேம்பாட்டு நிறுவனம் சமர்ப்பிக்கும் அறிக்கையை மாநில அரசு விரிவாக ஆராயும் என்று மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார். மேம்பாட்டாளருடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்திற்கேற்ப இதுவரை தமது தரப்பு எந்த அறிக்கையையும் பெறவில்லை என்று அவர் சொன்னார். இத்திட்டம் தொடர்பில் வெளியிடப்பட்ட கருத்துகள் மற்றும் விமர்சனங்களுக்கு தீர்வு



காண்பதாக மேம்பாட்டாளர்கள் எங்களிடம் வாக்குறுதியளித்தனர். எனினும், அதன் தொடர்பில் எந்த அறிக்கையும் எங்களுக்கு கிடைக்கவில்லை. ஆகவே, இத்திட்டம் தொடர்பில் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என்றார் அவர்.

நாம் நியாயமாக நடந்து கொள்ள வேண்டும். மேம்பாட்டாளர்கள் மற்றும் அத்திட்டத்தை எதிர்க்கும் பொதுமக்களின் கருத்தை நாங்கள் செவிமடுக்க வேண்டியுள்ளது. தரவுகள் மற்றும் ஆதாரங்களின் அடிப்படையில் நாங்கள் செயல்படுகிறோம். அவர்கள் முறையாக செயல்படாவிட்டால் நாங்கள் அத்திட்டத்தை நிராகரித்து விடுவோம் என்று அவர் மேலும் குறிப்பிட்டார். மாநில சட்டமன்றத்தில் இன்று பி.ஜே.டி. லிங்க் நெடுஞ்சாலை மீதான மாநில அரசின் நிலைப்பாடு குறித்து சுங்கை பீலேக் உறுப்பினர் ரோனி லியு எழுப்பிய துணைக் கேள்விக்கு பதிலளிக்கையில் அவர் இவ்வாறு கூறினார்.

# சிறப்பு தேர்ச்சி பெற்ற பட்டதாரி மாணவர்களுக்கு பிடிபிடிஎன் கடன் திருப்பிச் செலுத்துவதில் விலக்கு கிடைக்கும்




கோலாலம்பூர்: -

2019 முதல் இளங்கலை பட்டப் படிப்பில் முதல் நிலையில் தேர்ச்சி பெறும் மாணவர்களுக்கு தேசிய உயர்கல்வி நிதிக் கழகத்தின் (பிடிபிடிஎன்) கடனைத் திருப்பிச் செலுத்துவதில் விலக்களிக்க அரசாங்கம் மீண்டும் முடிவு. பொருளாதார நிலை, இனம் மற்றும் மதம் எதுவாக இருந்தாலும் தகுதியான மாணவர்களுக்கு இந்தச் சலுகை வழங்கப்படும் என்று பிரதமர் டத்தோஸ்ரீ இஸ்மாயில் சப்ரி யாக்கோப் கூறினார். எனவே, பிடிபிடிஎன் நிதி அமைச்சகத்துடன் சம்பந்தப்பட்ட ஒதுக்கீடுகளின் அடிப்படையில் இந்த விவகாரம் குறித்து விவாதிக்க முடியும் என்று அவர் நம்புகிறார். ‘‘இது மலேசிய குடும்ப குழந்தைகள் கடினமாக உழைக்கவும், படிப்பில் சிறந்த மதிப்பெண்களைப் பெறவும் ஒரு ஊக்கமாக இருக்கும்,’’ என்று அவர் கூறினார். இதற்கிடையில், இஸ்மாயில் சப்ரி அவர்களின் பிடிபிடிஎன் கடனை இன்னும் செலுத்தாத அனைத்து கடன் வாங்கியவர்களும் உடனடியாக அவ்வாறு செய்யுமாறு அறிவுறுத்தினார், இதனால் புதிய மாணவர்களுக்கு படிப்புக் கடன்கள் தொடர்ந்து வழங்கப்படும். ‘‘தேசத்தின் வாரிசுகளாக இருக்கும் புதிய மாணவர்களுக்கான நிதியின் தொடர்ச்சி கிடைப்பதை உறுதி செய்ய, படிப்புக் கடன்களைத் திருப்பிச் செலுத்துவது முக்கியம்’’ என்று அவர் கூறினார்.

# இந்திய சமுதாயம் முதல் சிலாங்கூர் திட்டம் போன்ற மேம்பாடுகளின் வழி பயனடையுமா?



ஏழையாக இந்நாட்டிற்கு வந்ததால் நாம் என்றென்றும் ஓட்டாண்டியாக இருக்க வேண்டியதில்லை. ஆம், நாம் உடல் உழைப்புக்கும் அப்பால் சிறிய சேமிப்பையும் முதலீடு செய்ய வேண்டும். அதுவே பிற்காலத்தில் கை கொடுக்கும் என்பதை உணர்ந்து செயல்பட வேண்டிய தருணம் இது. ஆங்கிலேயர்கள் 50 ஆம் ஆண்டுகளில் கோலாலம்பூர் வாழ் இந்தியர் மற்றும் சீனர்களிடம் அன்றைய பெட்டாலிங் ஜெயா புது நகர சொத்துகளில், குறிப்பாக வீட்டு மனைகளில் முதலீடு செய்ய வற்புறுத்தினர். நம்மவர்களில் வெகு சிலரை தவிர, சீனர்களே பெரும்பாலும் அன்று முதலீடு செய்தனர். இதற்கு சீன வியாபார சங்கங்கள் சீனர்களுக்கு உந்துதலாக இருந்தது. அன்று 6 முதல் 10 ஆயிரம் வெள்ளியாக இருந்த வீட்டு மனைகளில் முதலீடு செய்தவர்களுக்கு, இந்த சொத்து மதிப்பு இன்று சராசரி 10 லட்சமாக மலர்ந்துள்ளது. இன்று பல ஆயிரம் சீனர்கள் மில்லியனர்கள் ஆகி விட்டனர்.

சீனர்களின் வெற்றியைக் கண்ட அம்னோ 60 களில் ஷா ஆலாமை திறந்தது, எதுவெல்லாம் பெட்டாலிங் ஜெயாவில் மேம்பாட்டில் வெற்றிக்கு நடத்தப் பட்டதோ, அதனை மலாய்க்காரர்கள் பொருளாதார மேம்பாட்டுக்கு அம்னோ ஷா ஆலம் மேம்பாட்டிற்கு மேற்கொண்டது. அதனால் இன்று ஷா ஆலமில் லட்சக்கணக்கான மலாய் லட்சாதிபதிகள், கோடீஸ்வரர்கள். ஆனால், அங்கே இரப்பர் தோட்டங்களில் வாழ்ந்த பூர்வீக குடியானவர்களான இந்தியர்கள் இருப்பிடமும் இழந்து வேலையிடம் இழந்து, இரயில்வே ஒதுக்கீடுகளிலும், ஈய வயல் வெற்றிடத்திலும் தஞ்சம் புகுந்தனர். பெட்டாலிங் ஜெயாவின் வெற்றி, நாடு முழுவதும் பல பட்டணங்களில் சொத்துரிமைகள் பொது மக்களுக்கு திறக்கப்பட்டன. ஆனால், இந்திய சமுதாய வழிகாட்டியாக, வாழ வைக்கும் தெய்வமாக தங்களை காட்டிக் கொண்ட தானை தலைவர்கள், இல்லை அவர்களை தானை திருடன் என்பதே சரியாக இருக்கும். இந்தியர்களை உயர்த்த போகிறோம் என்று கூவிக்கொண்டு வீட்டுக்கு ஆயிரம் வாங்கி 25 ஆண்டுகளுக்கு பின் 800 வெள்ளிகளை திருப்பி கொடுத்துள்ளனர். இந்த சாதனை திருடர்கள் இன்னும் இந்த சமுதாயத்திற்கு வழிக் காட்ட துடிப்பதும், அவர்களை நம்பி ஒரு கூட்டம் பின் தொடர்வதும் மலேசிய இந்தியர்களின் பொல்லாத காலம்.

இன்று மித்ரா ,புஞ்சான திட்டம் என, பல பாணியில் அரசாங்க பணத்தை சில பெருச்சாளிகள் கொள்ளையிடுவதும். அதனை எதிர்த்து வேறு சிலர் குரல் கொடுப்பதும், அவரை சிலர் வெட்டுவதும், அதன் பின் குண்டர்கள் என்ற போர்வையில் ஒட்டுமொத்த இந்திய இளைஞர் சமுதாயத்தை சோஸ்மா போன்ற சட்டத்தைக் கொண்டு மிரட்டுவதும், கைது செய்வதும் இந்தியர்களை எங்கே கொண்டு சேர்க்கும்?

இச்சமுதாயம் கஷ்டப்பட்டு சேர்த்த சிறு சேமிப்பையும் கோட், கேஸ், போலீஸ், அபராதம் என கொட்டி கொடுப்பதை விட்டு. கேரி சிலாங்கூர் போன்ற பொருளாதார திட்டங்களில் முதலீடு செய்ய முன்வருமா? முதல் சிலாங்கூர் திட்டம் போன்ற மேம்பாடுகளின் வழி பயனடையுமா? என்பதனை பொறுத்திருந்து பார்ப்போம்.

# மாநிலத்தின் நீடித்த வளர்ச்சியை உறுதி செய்ய ஐந்து துறைகளுக்கு முன்னுரிமை



1. மாநிலத்தின் நீடித்த வளர்ச்சியை உறுதி செய்ய முதல் சிலாங்கூர் திட்டத்தில்ஐந்து துறைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும். தாக்கும் சக்தி, பேரிடர் மேலாண்மை, நீர் நிர்வாகம், கார்பன் அளவைக்கட்டுப்படுத்துதல், கழிவு மேலாண்மை, பல்லுயிர் மற்றும் இயற்கை வளம்ஆகியவை அந்த ஐந்து துறைகளாகும்.

நீடித்த மற்றும் சமூகவியல், நிர்வாக நடைமுறை கோட்பாட்டை அடிப்படையாககொண்ட சுற்றுச்சூழலுக்கு முன்னுரிமை அளிப்பதற்கு ஏதுவாக அணுகுமுறையில்காலத்திற்கேற்ப மாற்றம் செய்வது அவசியம்..

நிலையான சுற்றுச்சூழல் விவகாரம் அனைத்துலக நிலையில் எப்போதும் முதன்மை அம்சமாக விளங்குகிறது.

நீடித்த இடர்பாடுகள் சுற்றுச்சூழல் மற்றும் பருவநிலை மாற்றத்தை மையமாக கொண்டுள்ளதை உலக பொருளாதார ஆய்வரங்கு வெளியிட்ட 2021 ஆம் ஆண்டிற்கான உலக இடர் அறிக்கை காட்டுவதாகவும், மாநில சட்டமன்றத்தில் இன்று முதல் சிலாங்கூர் திட்டத்தை தாக்கல் செய்த போது அவர் தெரிவித்தார்.

## முதலாவது சிலாங்கூர் திட்டத்தில் 262 மேம்பாட்டுத் திட்டங்கள் அமல்

இந்த திட்டத்தில் 262 மேம்பாட்டுத் திட்டங்கள் உள்ளடங்கியுள்ளன. அவற்றில் சில ஏற்கனவே தொடங்கப்பட்டு விட்டன. மற்ற திட்டங்கள் இன்னும் திட்டமிடல் அளவில் உள்ளதோடு நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்கேற்ப அவை செயலாக்கம் காணும் என்று மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

இது தவிர, 44 உதவித் திட்டங்களை உள்ளடக்கிய இல்திஸாம் சிலாங்கூர் பென்யாயாங் திட்டம் (ஐ.எஸ்.பி.), கோவிட்-19 பெருந்தொற்றினால் பாதிக்கப்பட்ட

தொடர்ச்சி 4-ஆம் பக்கம் பார்க்க

முதல் பக்கத் தொடர்ச்சி...

## 2025 ஆம் ஆண்டிற்குள் மாநிலம் அடைய விரும்பும் 14 மைக்ரோ குறிகாட்டிகள் RS-1இல் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன. அவை

1. ஆண்டுக்கு 6.5 முதல் 7.0 சதவிகிதம் (ஜிடிபி) மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சிவிகிதத்தை அடைவது.

2. ஒவ்வொரு ஆண்டும் முன்னணி மற்றும் அதிநவீனத் துறைகளுக்கான அங்கீகரிக் கப்பட்ட முதலீடுகளில் RM25 முதல் RM35 பில்லியன் வரை இலக்கு வைப்பது.

3. ஒவ்வொரு 100 வளாகத்திற்கும் 70 சதவிகிதம் என்ற நிலையான அகண்ட அலைவரிசை (பிராட்பேண்ட்) ஊடுருவல் விகிதத்தை அடைவது.

4. 3.5 முதல் 3.8 மில்லியன் தனிநபர்கள் அல்லது மாநிலத்தின் தொழிலாளர் சக்தியில் சுமார் 97 சதவீதம் பேருக்கு வேலை வாய்ப்புகளை வழங்குவது.

5. மாதச் சராசரி குடும்ப வருமானத்தைச் சுமார் RM 9,290 இலக்காகக் கொள்வது.

6. முழுமையான வறுமையின் சதவீதத்தை 0.7 சதவீதமாகக் குறைப்பது.

7. ஏழ்மையின் சதவீதத்தை 11 சதவீதமாகக் குறைக்க வேண்டும்.

8. குடும்ப நல்வாழ்வு குறியீட்டு மதிப்பெண்ணில் 8.0 அளவை அடைவது.

9. 2005 இல் உமிழ்வு தீவிரத்தின் அடிப்படையில் GDP அடிப்படையிலான பசுமை இல்ல வாயு உமிழ்வு தீவிரத்தை 35 சதவீதம் குறைப்பது.

10. தினசரிச் சுத்தமான நீர் விநியோகத்தை உறுதி செய்வது.

11. கழிவு மறுசுழற்சி விகிதத்தை 15 சதவீதமாக உயர்த்த வேண்டும்.

12. தற்போதைய முன்னேற்றத்தின் அடிப்படையில் அதிகத் தாக்கத்தை ஏற்படுத்தும் RS-1 திட்டங்களுக்கு 100 சதவீதநிறைவு விகிதத்தை இலக்காகக் கொள்வது

13. அனைத்து ஊராட்சி மன்றங்களும் தேசியஅளவிலான முதல் 10 மதிப்பீடுகளுக்குப்போட்டியிட வைப்பது.

14. அரசு சேவைகளின் டிஜிட்டல் மயமாக்கல் 85 சதவீதத்தை எட்டுவதை உறுதி செய்வது.

ஐந்தாண்டு காலத்திற்கு மாநிலக் கொள்கை யைத் திரட்டுவதற்கான கட்டமைப்பான RS-1, மொத்தம் RM212.44 பில்லியன் மதிப்புள்ள திட்டங்கள் மற்றும் முன்முயற்சிகளை உள்ளடக்கியது.

மற்றும் பொருளாதார ரீதியாக பின்தங்கிய தரப்பினரை மீட்சிபெறச் செய்வதற்கான இரண்டாவது வாய்ப்பாக அமைகிறது.

இதன் மூலம், சமூக பொருளாதார சுழல் முறையை வலுப்படுத்துவதோடு பல்வேறு நலத்திட்டங்கள் வாயிலாக மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்துவது.

இத்திட்டங்களின் அமலாக்கம் மூலம் மாநிலத்தின் பொருளாதாரத்தை மேம்படுத்தவும் மக்களின் சுபிட்சமான வாழ்க்கைக்கு உத்தரவாதம் அளிக்க இயலும் என்பதோடு புதிய வருமானத்திற்கான வாய்ப்பை உறுதிப்படுத்தவும் நடப்பு தொழில்நுட்ப புத்தாக்க மாற்றங்களை கையாளவும் இயலும்.

மாநில சட்டமன்றத்தில் நேற்று 21,244 கோடி வெள்ளி மதிப்பிலான முதலாவது சிலாங்கூர் திட்டத்தை மந்திரி புசார் தாக்கல் செய்தார். அதில் 9,144 கோடி வெள்ளி மாநில மேம்பாட்டிற்கும் மக்கள் நலன் சார்ந்த திட்டங்களுக்கும் பயன்படுத்தப்படும்.

## வறுமை ஒழிப்பு உள்ளிட்ட ஆறு துறைகளுக்கு முதல் சிலாங்கூர் திட்டத்தில் முன்னுரிமை

முதல் சிலாங்கூர் திட்டத்தின் இரண்டாம் வியூக கருப்பொருளில் முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ள ஆறு துறைகளில் வறுமை நிலையை குறைப்பதும் ஒன்றாகும் என்று மந்திரி புசார் கூறினார்.

மக்களின் நல்வாழ்வுக்கு விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய அம்சங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட விரிவான ஆய்வில் அந்த ஆறு துறைகளும் கண்டறியப்பட்டதாக டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

கவனத்தில் கொள்ளப்பட்ட முதலாவது துறையாக வருமான அதிகரிப்பு மற்றும் சமூக நலன் விளங்குவதாக கூறிய அவர், இரண்டாவது துறையின் கீழ் இளைஞர்கள், மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் மீது கவனம் செலுத்தப்படும்..

மகளிர், குடும்பம் மற்றும் சமூகம் மூன்றாவது துறையாகவும் கட்டுப்படி விலை வீடுகள் நான்காவது துறையாகவும் சுகாதார பராமரிப்பு மற்றும் கல்வி ஐந்தாவது, ஆறாவது துறைகளாக விளங்குகின்றன.

## மாநிலத்தின் ஐந்தாண்டு கால மேம்பாட்டிற்காக வெ.21,244 கோடி மதிப்பில் இத்திட்டம்

மாநிலத்தின் அடுத்த ஐந்தாண்டு கால வளர்ச்சிக்கான செயல்வடிவமாக விளங்கும் திட்டத்தின் அமலாக்கம் ஒட்டுமொத்தமாக 21,244 கோடி வெள்ளியைஉள்ளடக்கியுள்ளது. மக்களின் நல்வாழ்வுக்கு உத்தரவாதம் அளிக்கும் திட்டங்கள் உள்பட மாநில நிலையிலான மேம்பாட்டிற்கு 9,244 கோடி வெள்ளி ஒதுக்கப்படுகிறது.

இந்நோக்கத்திற்காக மாநில அரசு 716 கோடி வெள்ளியைச் செலவிடும் வேளையில் எஞ்சிய 8,000 கோடி வெள்ளி அரசு துணை நிறுவனங்கள் மற்றும் தனியார் துறையின் பங்களிப்பின் மூலம் பெறப்படும்.

பன்னிரண்டாவது மலேசியத் திட்டத்தின் சில திட்டங்களையும் முதலாவது சிலாங்கூர் திட்டம் உள்ளடக்கியுள்ளது.

குறிப்பாக, 12,000 கோடி வெள்ளிக்கும் கூடுதலான மதிப்பைக் கொண்ட இ.சி.ஆர். எல். எனப்படும் கிழக்கு கரை நெடுஞ் சாலைத் திட்டம், எம்.ஆர்.டி. இரயில் திட்டம் ஆகியவையும் அதில் அடங்கும் என அவர் தெரிவித்தார்.

எனினும், முதலாவது சிலாங்கூர் திட்டம் 12வது மலேசியத் திட்டத்தைக் காட்டிலும் முற்றிலும் மாறுபட்டது. 12வது மலேசியத் திட்டம் அடிப்படை வசதிகளுக்கு மட்டும் முக்கியத்துவம் அளிக்கும் வேளையில் முதலாவது சிலாங்கூர் திட்டம் மாநில அரசு மற்றும் அரசு சார்பு நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் மக்கள் நலத் திட்டங்களையும் அதில் உள்ளடக்கியுள்ளது.

சிலாங்கூர் மாநிலத்தின் மேம்பாட்டு இலக்கை ஒருமுகப்படுத்தும் நோக்கில் முழுமையான மற்றும் விரிவான வகையில் இத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது..

## முதலாவது சிலாங்கூர் திட்டம் மத்திய அரசை சார்ந்திருப்பதை தவிர்க்க உதவும்

சிலாங்கூர் மாநில வரலாற்றில் முதன் முறையாக தாக்கல் செய்யப்பட்ட முதலாவது சிலாங்கூர் திட்டம் மக்களின் நல்வாழ்வை உறுதி செய்வதற்கு ஏதுவாக நீடித்த மற்றும் ஆக்ககரமான பொருளாதாரத்தை உருவாக்குவதை நோக்கமாக கொண்டுள்ளது.

மாநிலங்களுக்கான நிதியளிப்பு நியாயமானதாக இருக்க வேண்டும் என்பதால் திட்டங்களை அமல்படுத்துவதற்கு புத்ரா ஜெயாவை எந்நேரமும் சார்ந்திருக்காத திட்டம் இது.

உலகம் தற்போது எதிர்நோக்கி வரும் சுகாதார பிரச்னை, வாழ்க்கைச் செலவின அதிகரிப்பு, பொருள் விலையேற்றம், பருவநிலை மாற்றம், உள்ளிட்ட நெருக்கடிகள் பொருளாதாரத்திற்கும் மாநில மக்களுக்கும் கடுமையான விளைவு களை ஏற்படுத்தியுள்ளதாக அவர் சொன்னார்.

ஆகவே, இந்த சவால்களை எதிர்கொள் வதற்கான திட்டங்களை உருவாக்குவதற்கு எந்த முயற்சியையும் மேற்கொள்ளாமல் பொறுத்திருந்து பார்ப்போம் என்ற நிலைப்பாட்டை மாநில அரசு கொண்டிருக்க இயலாது என்றும் மந்திரி புசார் குறிப்பிட்டார்.

வரும் 2025 ஆம் ஆண்டிற்குள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 30 விழுக்காட்டு பங்களிப்பை வழங்கும் மாநிலமாக சிலாங்கூரை உருவாக்கும் நோக்கில் அடுத்த ஐந்தாண்டுகளுக்கான மேம்பாட்டு செயல்வடிவமாக முதலாவது சிலாங்கூர் திட்டத்தை மாநில அரசு உருவாக்கியுள்ளது.

இந்த முதலாவது சிலாங்கூர் திட்டம் பொருளாதார வளர்ச்சியை உறுதி செய்யும் அதேவேளையில் சமூக நலத் திட்டங்கள் வாயிலாக மக்களுக்கு ஆக்கத்திறனையும் அளிக்கிறது. அதே சமயம், நேர்மை, திறமை மற்றும் வெளிப்படைப் போக்கை அடிப்படையாக கொண்ட சேவை முறையையும் வலியுறுத்துகிறது.

## முதல் சிலாங்கூர் திட்டத்தில் சுகாதாரத் துறை வலுப்படுத் தப்படும் – மந்திரி புசார்

இத்திட்டத்தின் வாயிலாக இல்திசாம் சிலாங்கூர் சேஹாட் (ஐ.எஸ்.எஸ்.) திட்டத்தைவிரிவுபடுத்துவதன் மூலம் சுகாதாரத் துறையை மாநில அரசு மேலும் வலுப்படுத்தும்.

விரிவான சுகாதாரத் திட்டத்தைக் கொண்ட ஒரே மாநிலம் என்ற முறையில் பங்கேற்பாளர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க சிலாங்கூர் அரசு திட்டமிட்டுள்ளது.

ஐ.எஸ்.எஸ். என்பது குறைந்த வருமானம் பெறும் தரப்பினருக்கான மருத்துவ காப்புறுதித் திட்டமாகும். தனியார் கிளினிக்குகளில் சிகிச்சைப் பெறுவதற்கு உண்டாகும் செலவை குறைக்க இத்திட்டம் உதவுகிறது..

குடும்ப பிரிவில் பாலிசி வைத்திருப் போருக்கு ஆண்டுக்கு 500 வெள்ளி க்கும் தனிநபர் பிரிவில் பாலிசி வைத்திருப்போருக்கு ஆண்டுக்கு 400 வெள்ளிக்கும் இத்திட்டத்தின் மூலம் மருத்துவ பாதுகாப்பு வழங்கப் படுகிறது..

இத்திட்டம் மற்றும் பங்கேற் பாளர்கள் எண்ணிக்கையை அதிகரிப்பதன் மூலம் தேவைப்படும் தரப்பினர் சுகாதாரப் பாதுகாப்பை பெறுவதற்குரிய வாய்ப்பினை பெற இயலும்.

மாநிலத்திலுள்ள சுமார் 100,000 பேருக்கு பயன் தரக்கூடிய இந்த ஐ.எஸ். எஸ். சுகாதார பாதுகாப்புத் திட்டத்தை மந்திரி புசார் கடந்த ஜூலை 2ஆம் தேதி தொடக்கி வைத்தார்.

## பி40 தரப்பு சிறார்களுக்கான சத்துணவுத் திட்டம் மாநிலம் முழுமைக்கும் விரிவுபடுத்தப்படும்

சிலாங்கூர் மைந்தர்கள், ஆரோக்கிய மைந்தர்கள்' (அசாஸ்) எனும் திட்டத்தின் கீழ் சிறார்களுக்கு பத்து மாதங்களுக்கு சத்துணவு வழங்கும் திட்டம் மாநிலம் முழுமைக்கும் விரிவுபடுத்தப்படுகிறது.

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகள் மத்தியில் வளர்சிகுன்றியப் பிரச்னை மற்றும் சத்துணவு குறைபாடு ஏற்படுவதை தடுக்க இந்நடவடிக்கை மேற்கொள்ளப் படுகிறது.

சிலாங்கூரில் சிறார்கள் மத்தியில் சத்துணவு குறைபாடு கடுமையான பிரச்னையாக உள்ளது. ஆகவே, முதல் சிலாங்கூர் திட்டத்தில் இந்த அசாஸ் திட்டத்தை மாநில அரசு மாநிலம் முழுமைக்கும் விரிவுபடுத்துகிறது.

சிறார்கள் மத்தியில் சத்துணவு குறைபாடு பிரச்னையை களைவதன் மூலம் சத்துணவு இல்லாத காரணத்தால் ஏற்படும் நோய்ப் பிரச்னைகளிலிருந்தும் நீண்டகால அடிப்படையில் தீர்வு காண முடியும்.

அசாஸ் திட்டத்தை அமல்படுத் துவதற்கு மாநில அரசு கடந்தாண்டு நவம்பர் மாதம் தாக்கல் செய்த 2022 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் 10 லட்சம் வெள்ளியை ஒதுக்கீடு செய்ததுள்ளது.

## சுற்றுச்சூழலைப் பாதுகாக்க முதல் சிலாங்கூர் திட்டத்தில் ஒன்பது திட்டங்கள் அமல்

மாநிலத்தில் பல்லுயிர் மற்றும் இயற்கை வளங்களின் நீடித்த வளர்ச்சியை உறுதி செய்வதற்கு முதல் சிலாங்கூர் திட்டத்தில் ஒன்பது செயல் திட்டங்கள் மேற்கொள்ளப்படும்.

மூன்று வியூகங்களை உள்ளட க்கிய அந்த திட்டங்கள் மாநில அரசு மற்றும் ஊராட்சி மன்றங்கள் வாயிலாக நடைமுறைப்படுத்தப்படும். இத்திட்டத்தின் வாயிலாக மேற்கொள் ளப்படும் பசுமை மேம்பாடு மற்றும் இயற்கை வளங்களுக்கு புத்துயிரூட்டும் முயற்சிகள் சமூகவியல் நல்வாழ்வை மேம்படுத்தவும் உதவும்.

எதிர்காலத்தில் குறைந்த கார்பன் அளவு கொண்ட மாநிலமாக உருவாவதற்கு மாநில அரசு இலக்கு நிர்ணயித்துள்ளதாக மாநில சட்டமன்றத்தில் இன்று முதல் சிலாங்கூர் திட்டத்தை தாக்கல் செய்த போது மந்திரிபுசார் தெரிவித்தார்.

## பி40 மற்றும் எம்40 தரப்பினருக்கு பல்வேறு திட்டங்களை மாநில அரசு அமல்படுத்துகிறது

குறைந்த வருமானம் பெறும் பி40 தரப்பினருக்கு மட்டும் அல்லாமல் நடுத்தரவருமானம் பெறும் எம்40 தரப்பினருக்காகவும் மாநில அரசு பல்வேறு திட்டங்களை அமல்படுத்தி வருகிறது.

ஹிஜ்ரா சிலாங்கூர் சிறுதொழில் கடனுதவித் திட்டம், இருதய சிகிச்சை உதவித்திட்டம், சாரிங் சிலாங்கூர், கட்டுப்படி விலை வீடுகளின் நிர்மாணிப்பு ஆகியவையும் அதில் அடங்கும்.

அதே சமயம், மூத்த குடிமக்கள் பரிவுத் திட்டம் பி40 தரப்பினருக்கு மட்டுமல்லாது அனைத்து தரப்பினரும் பயன்பெறும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 82,000 பேர் பயன்பெறுகின்றனர். அவர்களில் 40 விழுக்காட்டினர் எம்40 தரப்பினராவர்.

மேலும், ரூமா இடாமான், ரூமா சிலாங்கூர்கூ, ரூமா இடாமான் திட்டங்கள் பி40 தரப்பினரை மட்டும் இலக்காக கொண்டிருக்கவில்லை. மாறாக, 10,000 வெள்ளி வருமானம் பெறக்கூடிய பி50 தரப்பினருக்கும் அத்திட்டத்தில் வாய்ப்பு வழங்கப்படுகிறது.

## 2050க்குள் கார்பன் வெளியேற்றத்தை சிலாங்கூரில் பூஜ்ஜியமாக இலக்கு

இத் திட்டம் (RS-1) 2050 ஆம் ஆண்டுக்குள் பூஜ்ஜிய கார்பன் வெளியேற்றத்தை அடைவதில் கவனம் செலுத்துகிறது என்று டத்தோ மந்திரி புசார் கூறினார். கார்பன் திட்டமிடலை செயல்படுத்த கார்பன் அறிக்கையிடல் பொறிமுறையைப் பயன்படுத்தி கிரீன்ஹவுஸ் வாயு வெளியேற்றத்தை கண்காணிப்பது செயல்படுத்தப்படவுள்ளது.

அனைத்து துறைகளிலும் கிரீன்ஹவுஸ் வாயு வெளியேற்றத்தைக் கண்டறிவது உள்ளூர் மட்டத்தில் சிறந்த குறைந்த கார்பன் திட்டமிடலை அனுமதிக்கிறது.

“கிரீன்ஹவுஸ் வாயு வெளியேற் றத்தில் ஒட்டுமொத்த குறைப்பு, காலநிலை அபாயங்களுக்கு அதிகரித்த பின்னடைவு மற்றும் பல்லுயிர் பாதுகாப்புக்கு அபாயம். ஆகவே, சாதகமான அளவு கார்பன் வெளியேற்றத்தை குறைப்பது.

“எரிசக்தி, போக்குவரத்து மற்றும் கட்டுமானம் போன்ற துறைகள் உள்நாட்டு கார்பன் வெளியேற்றங்களில் முக்கிய பங்களிக்கிறது.

“புதுமையான முறைகளைப் பயன்படுத்தி துறையில் மேம்பாடுகளில் கவனம் செலுத்துவதன் மூலம் சிலாங்கூர் குறைந்த கார்பன் மாநிலமாக மாறும் திறனைக் கொண்டுள்ளது” என்றும் மந்திரி புசார் சட்டமன்றத்தில் கூறினார்.

# குழந்தைகள் பராமரிப்பு மையங்களைக் கொண்ட நிறுவனங்களுக்கு ஊக்கத்தொகை




ஷா ஆலம்:-

வேலை செய்யும் பெண்களின் சுமையை எளிதாக்கும் வகையில் தங்கள் வேலை இடங்களில் குழந்தை பராமரிப்பு மையங்களை உருவாக்கும் நிறுவனங்களுக்கு சிறப்பு கழிவுகளை வழங்க மாநில அரசு திட்டமிட்டுள்ளது.

டத்தோ மந்திரி புசார் கூறுகையில், இந்த வசதி அதிகமான பெண்களை தொடர்ந்து வேலையில் இருக்க ஊக்குவிப்பதாகவும், இதனால் 2025 ஆம் ஆண்டுக்குள் பெண்களின் பங்களிப்பு 75 விழுக்காடு இலக்கை அடைய முடியும் என்று கூறினார். ‘‘அனைத்து ஊராட்சி மன்றங்களிலும் பாலூட்டும் தாய்மார்களுக்கு சிறப்பு அறைகள் மற்றும் குழந்தை பராமரிப்பு மையங்களை வழங்குவதைக் கட்டாயப் படுத்துவதுடன், மாநில அரசின் நிறுவனங்கள், துணை நிறுவனங்களின் வழி இது தொடங்கப்படும்’’ என்று டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி இன்று கூறினார். சிலாங்கூர் மாநில சட்டமன்ற அமர்வில் முதல் சிலாங்கூர் திட்டத்தை (ஆர்எஸ்-1) முன்வைக்கும்போது, நிதி மற்றும் திறன் பயிற்சிக்கான அணுகலை அதிகரிப்பதன் மூலம் பெண் தொழில் முனைவோரின் வளர்ச்சியும் வலுப்பெற்றதாக அமிருடின் கூறினார். ‘‘ஆர்எஸ்-1 மேலும் நெகிழ்வான வேலை ஏற்பாடுகளை வழங்க பொது மற்றும் தனியார் துறை முதலாளிகளை ஊக்குவிக்கும் திட்டங்களில் கவனம் செலுத்தும்.

# கட்டுப்படி விலை வீடுகள் எண்ணிக்கை அதிகரிப்பு கடன் பெறுவதை எளிதாக்க வங்கிகளுடன் பேச்சு



ஷா ஆலம்:-

அதிகமானோர் சொந்த வீட்டைப் பெறுவதை உறுதி செய்வதற்காக மாநில அரசு மேலும் அதிகமான கட்டுப்படி விலை வீடுகளை நிர்மாணிக்கும். ரூமா சிலாங்கூர் கூ, ரூமா இடாமான் மற்றும் ரூமா இடாமான் திட்டங்கள் பொது மக்கள் ஆயிரம் சதுரடி பரப்பளவில் அனைத்து வசதிகளும் கொண்ட வீட்டில் வசிப்பதற்குரிய வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்துள்ளதாக மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார். முதல் சிலாங்கூர் திட்டத்தின் கீழ் இரண்டு இலக்குகள் நிர்ணயிக்கப் பட்டுள்ளன. சொந்த வீட்டைப் பெறுவோரின் எண்ணிக்கையை அதிகரிப்பது மற்றும் சிறப்பான குடும்ப சுபிட்சத்திற்கு உத்தரவாதம் வழங்கும் குடியிருப்பை வழங்குவது ஆகியவையே அவ்விரு இலக்குகளாகும் என அவர் தெரிவித்தார்.

வீடு வாங்குவோர் கடன் பெறுவதில் எதிர்நோக்கும் சிரமத்தை போக்க மாநில அரசு வங்கிகளுடன் பேச்சு நடத்தும். வீடு வாங்குவோர் கடன் பெறுவதற்கு விண்ணப்பிக்கும் போதெல்லாம் முட்டுக்கட்டையை எதிர்நோக்குகின்றனர் என்றார் அவர். சிலாங்கூர் மக்கள் சொந்த வீடு பெறுவதற்காக சிறப்பு கடனுதவி முறையை அமல்படுத்துவது தொடர்பில் நிதி நிறுவனங்களுடன் குறிப்பாக வங்கிகளுடன் மாநில அரசு பேச்சு நடத்தி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# சிலாங்கூர் மெகா வேலைவாய்ப்பு கண்காட்சியில் 20,000க்கும் மேற்பட்ட வேலைகள் வழங்கப்படுகின்றன



ஷா ஆலம்:-

சிலாங்கூர் மெகா வேலை வாய்ப்புக் கண்காட்சியை நடத்துவதன் மூலம் சிலாங்கூர் வேலைவாய்ப்பின்மை பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் மாநில அரசு தனது உறுதிப்பாட்டை நிரூபித்துள்ளது, இது மக்களுக்கு சுமார் 20,490 வேலை வாய்ப்புகளை வழங்கும்.

சமூக நலத்துறைக்கான மாநில செயற்குழு உறுப்பினர் வி.கணபதிராவ் கூறியதாவது, ஜுன் 11 மற்றும் ஜுன் 12 ஆகிய தேதிகளில் நடைபெற்ற இந்த வேலைவாய்ப்பு கண்காட்சியில், 8,201 பேர் பதிவு செய்து, பொதுமக்களிடம் இருந்து ஊக்கமளிக்கும் கருத்துகளைப் பெற்றனர். அது தவிர, மாநில அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட மற்றொரு முயற்சி வேலை தேடல் போர்டல், www.selangorjobportal.com ஆகும். ‘‘மே 12 ஆம் தேதி தொடங்கப்பட்ட இந்த போர்டல், சிலாங்கூரில் உள்ள இளைஞர் குழுக்கள் பதிவு செய்யும் போது, முதலாளிகள் வழங்கும் நிகழ்நேர காலியிடங்களைத் தேட அனுமதிக்கிறது. ‘‘இதே நேரத்தில், சிலாங்கூர் மந்திரி புசார் (கட்டமைப்பு) அல்லது எம்பிஐ சிலாங்கூர் கெர்ஜாயா திட்டத்தையும் செயல்படுத்தியுள்ளது. ‘‘விண்ணப்பதாரர்கள் www.selangorkerjaya.com.my என்ற இணையதளத்தைப் பார்வையிடுவதன் மூலம் பதிவு செய்ய வேண்டும்,’’ என்று அவர் சிலாங்கூர் மாநிலசட்டமன்றத்தின் போது வேலையின்மைப் பிரச்சினைகள் குறித்து ரவாங் மாநில சட்டமன்ற உறுப்பினர் சுவா வெய் கியாட்டின் கேள்விக்கு பதிலளித்தார்.

அதற்கு மேலாக, இளைஞர்கள் மற்றும் புதிய பட்டதாரிகளின் சந்தைத்தன்மையை மேம்படுத்த உதவும் ஸ்மார்ட் சிலாங்கூர் தொழில்நுட்ப திறன்கள் மற்றும் நிபுணத்துவ திட்டம் (இக்திசாஸ்) போன்ற பல்வேறு திட்டங்கள் மூலம் பொருத்தமான திறன்கள் மற்றும்பயிற்சிகளை வழங்க மாநில அரசு முயற்சிக்கிறது, என்று அவர் மேலும் கூறினார்.

# பெட்டாலிங் மாவட்டத்திலுள்ள பள்ளிகளுக்கு இவ்வாண்டு வெ.69 லட்சம் மானியம்

## - மாநில அரசு வழங்கியது

பெட்டாலிங் ஜெயா:-

பெட்டாலிங் மாவட்டத்திலுள்ள பள்ளிகளுக்கு சிலாங்கூர் அரசு இவ்வாண்டு 69 லட்சம் வெள்ளியை மானியமாக வழங்கியுள்ளது.

கடந்த மே மாதம் 31 ஆம் தேதி வரை பெறப்பட்ட விண்ணப்பங்களின் அடிப்படையில் அனைத்து மொழிப் பள்ளிகளுக்கும் இந்த மானியம் வழங்கப்பட்டதாக மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

பள்ளிகளுக்கான மானியத் திட்டம் 2 கோடியே 60 லட்சம் வெள்ளி நிதி ஒதுக்கீட்டுடன் இவ்வாண்டும் தொடர்கிறது. இந்த உதவித்திட்டத்தின் அடையாள நிகழ்வாக இன்றைய நிகழ்வில் 10 பள்ளிகளுக்கு 20 லட்சம் வெள்ளி மானியம் வழங்கப்படுகிறது என அவர் குறிப்பிட்டார்.


நேற்று இங்குள்ள பெட்டாலிங் ஜெயா மாநகர் மன்றத்தின் போலாரட் சதுக்கத்தில் நடைபெற்ற ஜெலாஜா சிலாங்கூர் பென்யாயாங் நிகழ்வுக்கு தலைமையேற்று உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்தார்.

தேவையைப் பொறுத்து பள்ளிகளுக்கு வழங்கப்படும் மானியத்தின் அளவு வேறுபட்டிருக்கும். என்றார் அவர்.

நேற்றைய நிகழ்வில் விவேகானந்தா தமிழ்ப்பள்ளி, சுங்கை ரெங்கம் தமிழ்ப்பள்ளி, அசுந்தா இடைநிலைப்பள்ளி, கேத்தலிக் தேசிய இடைநிலைப்பள்ளி டாமன்சாரா சுங் ஹுவா சீனப்பள்ளி உள்ளிட்ட இருபது பள்ளிகள் மந்திரி புசாரிடமிருந்து மானியத்தைப் பெற்றுக் கொண்டன.

மாநிலத்திலுள்ள பள்ளிகளுக்கான இரண்டாம் கட்ட மானிய ஒப்படைப்பு நிகழ்வு வரும் செப்டம்பர் மாதம் நடைபெறும் என்று அமிருடின் தெரிவித்தார்.

பள்ளிகள் வழங்கும் ஒவ்வொரு விண்ணப்பத்தையும் மாநில அரசு செயலாளர் அலுவலகத்தில் உள்ள மனித வள மேம்பாட்டுப் பிரிவு பரிசீலித்து சான்றளிக்கும். இது தவிர, அந்த விண்ணப்பங்கள் தொடர்பில் மாநில ஆட்சிக்குழு உறுப்பினர்கள் தங்கள் ஆலோசனைகளையும் வழங்குவர் என்றார் அவர்.



## விவசாயத்தை நவீனமயமாக்க வெ.13.6 கோடி செலவில் திட்டங்கள் அமல்

ஷா ஆலம்:-
கடந்த 2018 ஆம் ஆண்டு முதல் மாநிலத்தில் விவசாய நடவடிக்கைகளை மேம்படுத்தும் திட்டங்களுக்காக மாநில அரசு 13 கோடியே 60 லட்சம் வெள்ளியை செலவிட்டுள்ளது.

நெல், தென்னை, செம்பனை, காய்கறி பயிரீடு மற்றும் உபகரணங்கள், விவசாய இடுபொருள் ஊக்குவிப்பு நடவடிக்கைகள் ஆகியவை அந்த மேம்பாட்டுத் திட்டங்களில் அடங்கும் என்று விவசாயத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் இஞ்சினியர் இஷாம் ஹஷிம் கூறினார்.



அந்த நிதியில் 5 கோடியே 20 லட்சம் வெள்ளிக்கும் மேல் கோல சிலாங்கூர் மற்றும் சபாக் பெர்ணம் மாவட்டங்களில் உபகரணங்கள் மற்றும் விவசாய இடுபொருள்கள் வழங்குவதற்கு பயன்படுத்தப்பட்டது என்று அவர் சொன்னார்.நெல் சாகுபடி ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் சம்பந்தப்பட்ட விவசாயிகளுக்கு விதை நெல், இயற்கை உரம் வழங்கப்பட்டதோடு நிலத்தை வளமாக்குவதற்கான திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டன என்று அவர் குறிப்பிட்டார்.

வடமேற்கு ஒருங்கிணைந்த விவசாய மேம்பாட்டுத் திட்ட பகுதியில் நெல் விளைச்சல் குறைந்து காணப்பட்டதற்கு அங்குள்ள நிலத்தை வளப்படுத்தும் பணிகள் உரிய பலனைத் தராததே காரணம் என்றும் அவர் தெரிவித்தார்.

நெல் உற்பத்தியை அதிகரிப்பதற்கு மத்திய அரசுடன் தாங்கள் ஒத்துழைப்பை நல்கி வருவதாகவும் இஷாம் கூறினார். இதன் அடிப்படையில் கடந்த 2021 முதல் காலாண்டு தொடங்கி 2,000 ஹெக்டர் நிலப்பரப்பில் ஸ்மார்ட் எனப்படும் விவசாய பெருந்திட்டம் அமல்படுத்தப்பட்டு வருகிறது என்றார் அவர்.

## சபாக் பெர்ணமில் நவீன விவசாயம் ஆண்டுக்கு வெ.24.8 கோடி அறுவடை செய்கிறது



ஷா ஆலம்: -
தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அதிக மதிப்புள்ள பயிர்களை உருவாக்குவது சபாக் பெர்ணம் பகுதியின் வளர்ச்சி திட்டம் (சப்டா) திட்டத்தின் கீழ் மாநில அரசின் உத்திகளில் ஒன்றாகும்.டத்தோ மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரியின் கூற்றுப்படி, வெ.190 கோடி முதலீடு மதிப்பில் 1,317 ஹெக்டேர் அபிவிருத்தி ஆண்டுக்கு வெ.24.8 கோடி வருவாய் ஈட்டுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. மாவட்டத்தில் பொருளாதாரத்தை ஊக்குவிக்கும் முயற்சிகள் உள்ளூர் மக்களுக்கு 3,600 வேலை வாய்ப்புகளை உருவாக்க முடிந்தது என்றும் அவர் விளக்கினார்.

"சிலாங்கூரில், 2015 முதல் 2020 வரை விவசாயத் துறை ஆண்டுக்கு மூன்று விழுக்காடு என்ற விகிதத்தில் வளர்ந்தது மற்றும் கோவிட்-19 தொற்றுநோய் இருந்தபோதிலும் தொடர்ந்து வளர்ந்து வருகிறது."சிலாங்கூர் விவசாயத் துறையின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) 2019 இல் வெ.471 கோடியிலிருந்து 2020 இல் வெ.472 கோடியாக ஒரு சிறிய அதிகரிப்பு பதிவு செய்துள்ளது," என்று அவர் மாநில சட்டமன்றக் கூட்டத்தில் கூறினார்.இன்று முதல் சிலாங்கூர் திட்டத்தை (RS-1) முன்வைத்து பேசிய அமிருடின், சிலாங்கூர் பட்ஜெட் 2021ல் மாநிலத்தின் விவசாயத் துறைக்கு சிறப்பு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்றார்.

வேளாண் தொழில்நுட்ப துறையின் வளர்ச்சிக்காக சிலாங்கூர் துரித திட்டத்துடன் கூடுதலாக வெ..2.64 கோடி ஒதுக்கீட்டில் இணையத்தைப் பயன்படுத்தி அதிக மதிப்புள்ள பயிர்களை உற்பத்தி செய்யும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது என்று அவர் விளக்கினார்.

## விரைவான நடவடிக்கை வழி எண்ணெய் கசிவு ஆற்றில் கலப்பதை தடுத்தது லுவாஸ்



ஷா ஆலம்:-
(லுவாஸ்) 24 மணி நேர மாசுபாடு கண்காணிப்பின் வழி வடக்கு–தெற்கு நெடுஞ்சாலையில் (பிளஸ்) KM 294.9 ஏற்பட்ட விபத்தை தொடர்ந்து நீர் மாசுபடும் அபாயத்தை வெற்றிகரமாக தடுத்து நிறுத்தியது.நிறுவனத்தின் கூற்றுப்படி, இன்று அதிகாலையில் ஒரு கார் மற்றும் லாரி இடையே நிகழ்ந்த ஒரு விபத்தில் ஏற்பட்ட எண்ணெய் கசிவு அருகே உள்ள கால்வாய்கள் அல்லது நீர் ஆதாரங்களில் பாய விடாமல் தடுக்கப்பட்டது.

சுங்கை லங்காட்டில் இருந்து 30 மீட்டர் தொலைவில் சம்பவம் நடந்ததை கருத்தில் கொண்டு நிலமை மேலும் மாசடைவதைத் தடுக்க, லுவாஸ் மற்றும் பிளஸ் நிறுவனமும் இணைந்து சம்பந்தப்பட்ட பகுதியில் மரத் தூள்களை போட்டதாக லுவாஸ் விளக்கியது." மேலும் லுவாஸ் விசாரணையில் விபத்து பகுதிக்கு அருகில் உள்ள கால்வாயில் மற்றும் அருகில் உள்ள நீர் ஆதாரங்களில் எண்ணெய் கலக்கவில்லை என்று கண்டறியப்பட்டது.

"இந்தச் சம்பவம் சுத்திகரிப்பு நிலையத்தின் செயல்பாட்டைப் பாதிக்காமல் இருப்பதற்கும், பயனர்களுக்கு நீர் விநியோகம் சீர்குலையாமல் இருப்பதற்கும் அவ்வப்போது நெருக்கமான கண்காணிப்பு தொடர்கிறது" என்று அவர் பேஸ்புக்கில் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளார். மாநிலத்தில் நீர் வளத்திற்கு இடர்பாடுகள் ஏற்படுவதை தடுக்க நதிப் படுகையில் 24 மணி நேர கண்காணிப்பை செயல்படுத்துவதற்கு லுவாஸ் நிறுவனம் உறுதி பூண்டுள்ளதாக தெரிவித்தார்.

## 2025 க்குள் வருமானம் ஈட்டாத தண்ணீரின் சராசரி அளவு 25 விழுக்காடு குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது




ஷா ஆலம்:-
சிலாங்கூரில் உற்பத்தி செய்யப்படும் தண்ணீரில் வீணாகும் நீரின் சராசரி விகிதம் (NRW) 27.93 விழுக்காட்டுடன் ஒப்பிடும்போது 2025 ஆம் ஆண்டில் அது 25 விழுக்காட்டுக்கு குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த ஆண்டு டிசம்பர் 31-ம் தேதி நிலவரப்படி 30,008 கி.மீட்டர் குழாய்களில் 556.14 கிலோமீட்டர் (கி.மீ) நீளம் வெற்றிகரமாக மாற்றப்பட்டது என்று அடிப்படையில் கணக்கிடப்படுவதாக டத்தோ மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

"ஒரு நாளைக்கு 230 லிட்டர் தனிநபர் தண்ணீர் நுகர்வு விகிதம் சிலாங்கூரில் உள்ளது, ஐக்கிய நாடுகள் சபையின் (UN) பரிந்துரையின்படி ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு 165 லிட்டர் நீர் நுகர்வை விட 45 விழுக்காடு அதிகம்.

"இருப்பினும், சிலாங்கூரின் மூல நீர் ஆதாரங்களில் 90 விழுக்கா ட்டுக்கும் அதிகமானவை ஆறுகளில் இருந்து எடுக்கப் படுகின்றன, 62 விழுக்காடு நீர் விநியோகமாக பயன்படுத்தப் படுவதற்கு முன் கூடுதல் சுத்திகரிப்பு தேவைப்படுகிறது," என்று அவர் சிலாங்கூர் மாநில சட்டசபையில் முதல் சிலாங்கூர் திட்டத்தை (RS-1) முன்வைக்கும்போது கூறினார்.

ஜூன் 30 அன்று, சிலாங்கூர் நீர் மேலாண்மை எஸ்டிஎன் பிஎச்டி (ஆயர் சிலாங்கூர்) 2021 இல் NRW இல் 27.93 விழுக்காடு பதிவாகியுள்ளதாக அறிவித்தது, இது சிலாங்கூர் நீர் சேவை ஆணையம் நிர்ணயித்த இலக்கை விட 28 விழுக்காடு அதிகம்.

அதன் தலைமை நிர்வாக அதிகாரி சுஹைமி கமரால்ஜமான் கூறுகையில், இந்த தொகை ஒரு நாளைக்கு 19.25 கோடி லிட்டர் தண்ணீரை சேமிப்பதற்கு சமம், இதனால் செயல்பாட்டு செலவுகள் மேம்படுகிறது மற்றும் வளங்களின் செயல்திறனும் மேம்பட்டுள்ளது என்றார்.

# ஆகாய பூங்கா மாநிலத்தின் உலகளாவிய விண்வெளி மையமாக உயர்கிறது



ஷா ஆலம்:-

மாநிலமும் மலேசியாவும் உலக அளவில் குறிப்பாக தென்கிழக்கு ஆசியாவில் விண்வெளி மையமாக மாறுவதை உறுதி செய்வதற்காக சிலாங்கூர் சர்வதேச ஆகாய பூங்கா (SAP) உருவாக்கப்பட்டது.

டத்தோ மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரியின் கூற்றுப்படி, சிலாங்கூர் விண்வெளி நடவடிக்கை திட்டம் 2020-2030 இல் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள மாநில அரசின் இலக்குகளுக்கு இணங்க இந்த முயற்சி உள்ளது.

RM220 கோடி முதலீட்டில் கிள்ளான் ஆற்றை சுற்றி 27,960 ஹெக்டேர் பரப்பளவில் சிலாங்கூர் கடல்வழி நுழைவாயில் பொருளாதார மேம்பாட்டு மண்டலத்தையும் மாநிலம் நிறுவுவதாக அவர் விளக்கினார்.

"மலேசியா ஒரு விரிவான விண்வெளி சுற்றுச்சூழல் அமைப்பைக் கொண்டுள்ளது. 240 விண்வெளி மற்றும் தொடர்புடைய நிறுவனங்களில் 63 விழுக்காடு சிலாங்கூரில் அமைந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது, இதனால் மாநிலம் ஒரு விண்வெளி மையமாக உள்ளது," என்று அவர் கூறினார்.சிலாங்கூர் மாநில சட்டமன்ற அமர்வில் முன்வைக்கப்பட்ட முதல் சிலாங்கூர் திட்டத்தின் (RS-1) முக்கிய சாராம்சத்தில் ஒரு பகுதியாக ஒரு விண்வெளி மையத்தின் மேம்பாடு உள்ளது.

கடந்த ஆண்டு தொடங்கி, மாநில அரசு சிலாங்கூர் விமான கண்காட்சியை சுபாங்கில் ஏற்பாடு செய்து தொழில்துறையினருக்கு வணிக வலைப்பின்னல்கள் திறக்கவும், பொதுமக்களை விமானப் போக்குவரத்துக்கு வெளிப்படுத்தவும் ஏற்பாடு செய்தது.நிகழ்வின் இரண்டாவது பதிப்பு செப்டம்பர் 8 முதல் மூன்று நாட்களுக்கு நீடிக்கும், இது RM7 கோடி பரிவர்த்தனை மதிப்பை இலக்காகக் கொண்டது.

சபுரா ஏரோ, டெஸ்டினி ஏவியா டெக்னிக், எபிக் ஏரோ, டிஜேஜ அகாடமி, சூப்பர்ப் அக்சஸ், பிசிஸ்ஸ் ஏவியேஷன், சிரிம் மற்றும் இன்டர்நேஷனல் ஏரோ டிரெய்னிங் அகாடமி ஆகியவை பங்கேற்பதை உறுதிசெய்த நிறுவனங்களில் அடங்கும்.

# கோ டிஜிட்டல் திட்டத்தின் வழி வெ.50,000 வரை வர்த்தக கடனுதவி—ஹிஜ்ரா அறவாரியம் வழங்குகிறது




ஷா ஆலம்:-

இணையம் வழி வர்த்தகத்தை விரிவுபடுத்த விரும்பும் தொழில்முனைவோர் யாயாசான் ஹிஜ்ரா அறவாரியத்தின் கோ டிஜிட்டல் திட்டத்தின் மூலம் 50,000 வெள்ளி வரை கடனுதவி பெறலாம்.

வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் தங்கள் நடவடிக்கைகளை நவீன தளங்கள் வாயிலாக இலக்கவியல் மயமாக்குவதில் உதவும் நோக்கில் இத்திட்டம் கடந்தாண்டு பிப்ரவரி மாதம் அறிமுகப்படுத்தப்பட்டது.

இலக்கவியல் முறையில் தங்கள் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் தங்கள் தயாரிப்புகள் மற்றும் சேவைக்கான சந்தையை மேலும் விரிவுபடுத்தி கூடுதல் வருமானத்தை ஈட்டுவதற்குரிய வாய்ப்பினை பெற முடியும் என்று ஹிஜ்ரா அறவாரியம் தனது பேஸ்புக் பதிவில் கூறியது.

கோவிட்-19 பெருந்தொற்று காலத்தில் பெரும் சிரமத்தை எதிர்நோக்கியிருந்த வணிகர்களுக்கு உதவும் நோக்கில் கோ டிஜிட்டல் திட்டத்தை மாநில அரசு கடந்தாண்டு பிப்ரவரி மாதம் 10 ஆம் தேதி தொடக்கியது.

சுமார் மூவாயிரம் வணிகர்களை இலக்காக கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த திட்டத்தின் கீழ் வர்த்தக நடவடிக்கைகளை இலக்கவியல் முறையில் விரிவுபடுத்துவதற்கு தேவையான கையடக்க கணினி உள்ளிட்ட தொடர்பு சாதனங்களை வாங்க கடனுதவி வழங்கப்படுகிறது.

# மாநிலம் ஊராட்சி மன்றம் அளவில் மூத்த குடிமக்கள் பரிவுத் திட்டத்தை அறிமுகப்படுத்துகிறது

ஷா ஆலம்:-

நலன், உடல் மற்றும் மன ஆரோக்கியம் ஆகிய அம்சங்களை உள்ளடக்கிய மூத்த குடிமக்கள் பரிவுத் திட்டத்தை ஊராட்சி மன்றத்தில் மாநில அரசு அறிமுகப்படுத்தவுள்ளது.

2040- க்குள் 13 லட்ச மக்களாக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படும் சம்பந்தப்பட்ட குழுவின் தேவைகளைப் பூர்த்தி செய்வதே இந்த முயற்சி என்று டத்தோ மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

"அலுவலகம் மற்றும் வீட்டுக் கட்டிடங்களின் கட்டுமானத் திட்டங்களில் முதியோருக்கான சிறப்பு வசதிகளான லிஃப்ட் மற்றும் சிறப்பு பாதைகள் மற்றும் சிறப்பு அறைகள் போன்றவற்றைக் கட்டாயமாக்குவது இதில் அடங்கும். "இதற்கிடையில், மூத்த குடிமக்கள் பரிவுத் திட்டம் (எஸ்.எம்.யு.இ.) மற்றும் முதியோர் நலன் மற்றும் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தும் சிலாங்கூர் சாரிங் திட்டமும் விரிவுபடுத்தப்படும்," என்று அவர் சிலாங்கூர் மாநில சட்டமன்ற அமர்வில் கூறினார்.

ஒவ்வொரு உறுப்பினரும் RM100 ஷாப்பிங் பற்றுச் சீட்டு மற்றும் இறப்புத் தொண்டுக்காக RM500 மூலம் பயனடைவதன் மூலம் மாநிலத்தின் முதியோர்களை சிறபிக்க ஒரு தசாப்தத்திற்கும் மேலாக எஸ்.எம்.யு.இ. அறிமுகப்படுத்தப்பட்டது.

சிலாங்கூர் 2022 வரவுசெலவுத் திட்டத்திலும் இவ் ஆண்டுத் திட்டத்தின் தொடர்ச்சிக்காக RM 2.75 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.



# கலை அருங்காட்சியகம், தொற்று நோய்க்கு பிந்தைய சுற்றுலாத் துறைக்கு புத்துயிர் அளிக்கிறது



ஷா ஆலம்:-

சுற்றுலாத் திறனை வலுப்படுத்தவும், கோவிட்-19 தொற்றுநோய்க்குப் பின் அத் துறைக்கு புத்துயிர் அளிக்கவும் சிலாங்கூர் கலை அருங்காட்சியகம் உருவாக்கவுள்ளது. டத்தோ மந்திரி புசார் கருத்துப்படி, அடையாளம் காணப்பட்ட இயக்கத் திட்டங்களில் ஷா ஆலம் தற்கால மற்றும் நவீன கலை (SAMA) சுற்றுலாக் குழுவின் கீழ் மேம்பாடு உள்ளது. தேசிய மற்றும் தென்கிழக்கு ஆசிய கலைஞர்களின் மகத்துவத்தைக் காண உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வகையில் ஈர்ப்பு திறன் கொண்டதாக டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி நம்பிக்கை தெரிவித்தார்.

"சிலாங்கூர் மாநிலத்தில் சுற்றுலாத் துறையுடன் தொடர்புடைய பல இடங்கள் உள்ளன, இதனால் சுற்றுலாவின் திறனை வலுப்படுத்துவது மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதாகும்" என்று அவர் சிலாங்கூர் மாநில சட்டமன்றக் கூட்டத்தில் கூறினார். முதல் சிலாங்கூர் திட்டத்தை (RS-1) முன்வைத்து பேசிய அவர், தொழில்துறையை மீண்டும் ஊக்குவிக்க சிலாங்கூர் மாநில சுற்றுலா மாஸ்டர் பிளான் 2021-2026 ஐ அறிமுகப்படுத்தியது என்கிறார். 2020 முதல் இரண்டு ஆண்டுகளில் வருமான ஆதாரங்கள் மற்றும் இத்துறை தொடர்பான வேலைகளில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திய தொற்றுநோயின் விளைவுகளைச் சமாளிப்பதற்கு இத்திட்டம் உதவும் என்று அவர் விளக்கினார்."மலேசியா அதன் வளமான கலாச்சாரத்துடன் இந்த பிராந்தியத்தின் சுற்றுலாத் துறையில் அதன் சொந்த ஈர்ப்பைக் கொண்டுள்ளது. இது நாட்டின் பொருளாதாரத்திற்கு மிக முக்கியமான பங்களிப்பில் ஒன்றாகும். "தொற்றுநோயின் போது, 2020 இல் 72 விழுக்காடு திடீரென வீழ்ச்சியைப் பதிவு செய்வதன் மூலம் இந்தத் துறையின் வளர்ச்சி பாதிக்கப்பட்டது" என்று அமிருடின் மீண்டும் கூறினார்.

RANCANGAN SELANGOR

## முதல் சிலாங்கூர் திட்டம்

வாழ்வதற்கு ஏற்ற வளமான நாடு

- பொருளாதார வலுப்படுத்துதல்
- மக்கள் நல் வாழ்வுக்கு சமூக ஊடக மேம்பாடு
- நிலைத்தன்மை உந்துதல்
- ஆட்சி விவேகம் மற்றும் பயன் மிக்கது

**262** திட்டங்கள் | **5** அடிப்படை வினையூக்கி | **20** மாற்றத்தின் இயக்கி

## திட்டம் 1 — பொருளாதார வலுப்படுத்துதல்

▶ பொருளாதார வளர்ச்சியின் இதயம் மற்றும் மலேசியா மற்றும் ஆசிய பிராந்தியத்தில் தரமான முதலீட்டிற்கான முக்கிய இடமாக அதன் நிலையை வலுப்படுத்துதல்.

- **101** திட்டங்கள்
- **4** ஒட்டுமொத்த முக்கிய உத்தி
- **9** கவனம் செலுத்தும் துறைகள்

▶ சாதனை குறிகாட்டிகள்

| | |
|---|---|
| ஆண்டு ஜிடிபி வளர்ச்சி | 6.5 - 7.0% (சராசரி 2021-2025) |
| முக்கிய மற்றும் அதிநவீன துறைகளுக்கான அங்கீகரிக்கப்பட்ட முதலீடுகள் | RM2500-3500 கோடி (சராசரி 2021-2025) |
| வேலை வாய்ப்புகள் | 3.5-3.8 கோடி தனிநபர்கள் (சராசரி 2021-2025) |
| ஒவ்வொரு 100 வளாகத்திற்கு நிலையான பிராட்பேண்ட் ஊடுருவல் | 70% (2025 க்குள்) |

▶ பிராந்திய வளர்ச்சித் திட்டத்தின் அடிப்படையில் கூடுதல் வளர்ச்சி அடையாளம் காணப்பட்டது

**தெற்கு சிலாங்கூரில் ஒருங்கிணைந்த பிராந்திய வளர்ச்சி (IDRISS)**

மதிப்பிடப்பட்ட மொத்த வளர்ச்சி மதிப்பு (GDV) RM 1 லட்சம் கோடி

**சிலாங்கூர் கடல்சார் நுழைவாயில் பொருளாதார வளர்ச்சி மண்டலம் (ZPE SMG)**

மதிப்பிடப்பட்ட முதலீடு RM220 கோடி

| | |
|---|---|
| சபாக் பெர்ணம் பகுதியின் வளர்ச்சி திட்டம் (சப்டா) | முதலீடு RM190 கோடி; வருவாய் ஆண்டுக்கு RM24.8 கோடி; வேலை வாய்ப்பு 3,600 |
| கேரி சிலாங்கூர் | மொத்த மதிப்பு RM4020 கோடி 2060 இல்; GDP பங்களிப்பு மதிப்பு RM471 கோடி 2045 க்குள் |
| ஷா ஆலம் விளையாட்டு வளாகம் (KSSA) மறுவடிவமைப்பு திட்டம் | GDB இலக்கு RM800-1300 கோடி |
| சுற்றுலா துறை வலுப்படுத்துதல் | ஷா ஆலமின் வளர்ச்சி சமகாலத்தவர் மற்றும் நவீன கலை (SAMA) |

## திட்டம் 2 — நிலைத்தன்மை உந்துதல்

▶ எதிர்கால சந்ததியினருக்காக சுற்றுச்சூழலைப் பாதுகாக்க நிலையான வளர்ச்சியில் முன்னணியில் இருங்கள்.

- **38** திட்டங்கள்
- **5** கவனம் செலுத்தும் துறைகள்
- **14** ஒட்டுமொத்த முக்கிய உத்தி

▶ சாதனை குறிகாட்டிகள்

| | |
|---|---|
| ஜிடிபி அடிப்படையில் கிரீன்ஹவுஸ் வாயு தீவிரம் குறைப்பு | 35% (2025 க்குள்) |
| சுத்தமான தண்ணீர் தினசரி கிடைக்கும் | 24 மணிநேரம் (2021-2025) |
| கழிவு மறுசுழற்சி விகிதம் | 15.0% (2025 க்குள்) |

1. **ஏற்கனவே உள்ள திட்டங்களின் மேம்பாடுகள் மற்றும் புதிய திட்டங்களைச் சேர்த்தல்:**
   - ஸ்மார்ட் சிலாங்கூர் செயல்பாட்டு மையம் (SSOC) — 2025க்குள் பேரிடர் முன்னெச்சரிக்கைகளை அனுப்ப முடியும்
   - பேரிடர் மேலாண்மை செயல் திட்ட வளர்ச்சி — பேரிடர் மேலாண்மைக்கான தயார்நிலை, பயனுள்ள நிர்வாகம் மற்றும் தகவல்தொடர்பு ஆகியவற்றில் கவனம் செலுத்துவதன் மூலம் நடவடிக்கை மற்றும் மீட்பு
   - வெள்ளத்தைத் தணிக்கும் உள்கட்டமைப்புத் திட்டங்களைச் செயல்படுத்துதல் — ஆறுகளை ஆழப்படுத்துதல், நீர்த்தேக்கங்கள் மற்றும் குளங்களை நிர்மாணித்தல் மற்றும் மேம்படுத்துதல்
2. **சிலாங்கூர் கடல்வழி நுழைவாயில் (SMG)**
   - கிள்ளான் ஆற்றின் சுத்தம் மற்றும் மறுசீரமைப்பு — இன்டர்செப்டர்
   - ஒருங்கிணைந்த நீர் மேலாண்மை அமைப்பு மற்றும் சுங்கை ரசாவ் நீர் சுத்திகரிப்பு நிலையம்
3. **கிரீன்ஹவுஸ் வாயு வெளியேற்றத்தைக் குறைத்தல்**
   - தொழில்துறைக்கான கார்பன் அறிக்கையிடல் வழிமுறைகளின் பயன்பாடு
   - கிரீன்ஹவுஸ் வாயு கணக்கீட்டு கட்டமைப்பின் வளர்ச்சி
4. **ஒருங்கிணைந்த கழிவு மேலாண்மை அமைப்பு** — 3 முக்கிய திட்டங்களில்:
   - பொருள் மீட்பு வசதியின் மேம்பாடு (MRF)
   - கழிவு மேலாண்மை செயல் திட்டம்
   - ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை மையம் (ISWMC) கழிவு முதல் ஆற்றல் (WTE) சுத்திகரிப்பு நிலையம்
5. **பல்லுயிர் மற்றும் இயற்கை வளங்களின் நிலைத்தன்மையை மேம்படுத்துதல்**
   - 9 திட்டங்கள்
   - 3 மூலோபாயம்

## திட்டம் 3 — சமூக உள்ளடக்கம் மற்றும் மக்களின் நலனை மேம்படுத்துதல்

▶ சீரான மற்றும் உள்ளடக்கிய முறையில் நல்வாழ்வு மற்றும் நலனை வலியுறுத்துவதன் மூலம் வாழ சிறந்த மாநிலமாக இருக்க வேண்டும்.

- **72** திட்டங்கள்
- **6** கவனம் செலுத்தும் துறைகள்
- **21** ஒட்டுமொத்த முக்கிய உத்தி

▶ சாதனை குறிகாட்டிகள்

| | |
|---|---|
| சராசரி குடும்ப வருமானம் | RM9,290 (2025 க்குள்) |
| முழுமையான வறுமை* | 0.7% (2025 க்குள்) |
| சம்பந்தப்பட்ட வறுமை | 11.0% (2025 க்குள்) |
| குடும்ப நல்வாழ்வு அட்டவணை | 8.0 (2025 க்குள்) |

1. **வருமானம் மற்றும் சமூக நலன்**
   - சிலாங்கூர் வளமான வாழ்க்கை உதவித் திட்டம் (பிங்காஸ்) RM300 ஒரு மாதம் தகுதியான குடும்பங்களுக்கு
   - தொழில் முனைவோர் உதவித் திட்டம் — குடும்ப வருமானத்தை அதிகரிக்கவும், வறுமையை ஒழிக்கவும்
2. **இலக்கு குழுக்களில் சிறப்பு கவனம் (இளைஞர்கள், முதியவர்கள் மற்றும் குறைபாடுகள் உள்ளவர்கள்)**
   - முதியோர் ஷாப்பிங் திட்டம்
   - சாரிங் சிலாங்கூர் திட்டம்
   - முதியவர்களின் நலன் மற்றும் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவதன் மூலம் விரிவாக்கப்பட்டது
   - மூத்த குடிமக்கள் நட்புக் கொள்கை — ஊராட்சி மன்றம் அளவில் மாற்றியமைக்கப்பட்டது
   - இளைஞர்கள் மற்றும் உடல் ஊனமுற்றவர்கள் — வேலையின்மை பிரச்சினைகளை கையாள்வதில் இளைஞர்களின் நல்வாழ்வு மற்றும் சந்தைத் தன்மையை மேம்படுத்துதல்
   - பின்வரும் திட்டங்கள் விரிவுபடுத்தப்படும்: ரோடா டாருல் ஏசான்; சிலாங்கூர் வேலை திட்டம்; சிலாங்கூர் தொழில் திட்டம்
3. **பெண்கள், குடும்பம் மற்றும் சமூகம்**
   - நிறுவனங்களுக்கு சிறப்பு சலுகைகள் — இது அலுவலகத்தில் ஒரு நர்சரி / குழந்தை பராமரிப்பு மையத்தை உருவாக்குகிறது
   - குழந்தை பராமரிப்பு மையங்கள் மற்றும் சிறப்பு குழந்தை உணவு அறைகளை வழங்குதல் — சிலாங்கூர் முழுவதும் அனைத்து ஊராட்சி மன்ற வளாகங்கள்

## திட்டம் 4 — ஆட்சி விவேகம் மற்றும் பயன் மிக்கது

▶ நவீன, தொலைநோக்கு மற்றும் மக்களை மையமாகக் கொண்ட அரசாங்கம் வளர்ச்சியை எளிதாக்குகிறது

1. **இடர் மேலாண்மைக் குழுவை (RMC) நிறுவுதல்** — சிலாங்கூர் மாநிலம் எதிர்கொள்ளும் பல்வேறு வகையான அபாயங்களைக் கையாள்வதற்கான அறிவியல் தரவுகளை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறை
2. **செயல்படுத்தல் மற்றும் செயல்திறன் கண்காணிப்பு யூனிட்களை நிறுவுதல் (தயார்)**
   - திட்டத் தகவல் மற்றும் மாநில முன்முயற்சிகள் பற்றிய விரிவான அறிக்கையை வழங்குதல்
   - செயல்திறன் முன்னேற்ற நிலையின் காட்சியை இயக்குகிறது மற்றும் தகவலைப் பிரித்தெடுக்க முடியும்
3. **டிஜிட்டல்மயமாக்கல் மாற்றம்** — சிலாங்கூர் அரசு தரவு பரிமாற்றம் (SelGDX) மாநில ஏஜென்சிகள் மற்றும் பொதுத்துறை முழுவதும் ஒரு ஒருங்கிணைந்த தரவு பகிர்வு தளம்

- **51** திட்டங்கள்
- **5** கவனம் செலுத்தும் துறைகள்
- **12** ஒட்டுமொத்த முக்கிய உத்தி

▶ சாதனை குறிகாட்டிகள்

| | |
|---|---|
| உயர் தாக்கம் RS-1 திட்ட நிறைவு விகிதம்** | 100% (2025க்குள்) |
| தேசிய அளவில் உள்ளாட்சி அமைப்புகளின் நிலை | முதல் 10 (அனைத்து அதிகாரிகள்) |
| பொது டிஜிட்டல் சேவைகள் முடிவில் இருந்து இறுதி வரை உள்ளன | 85.0% (2025க்குள்) |

# ம.இ.கா-வின் இரட்டை வேடம்

## சோஸ்மா சட்டத்தை நீடிக்க நாடாளுமன்றத்தில் ஆதரவு, தடுப்புக்காவலில் உள்ளவர்களுக்குச் சட்ட உதவியா?







கடந்த 24ந் தேதி பலத்த எதிர்ப்பு இருந்தபோதிலும், பாதுகாப்பு குற்றங்கள் (சிறப்பு நடவடிக்கைகள்) சட்டம் 2012 (சோஸ்மா) இன் கீழ் சந்தேக நபர்களின் தடுப்புக் காவலை நீட்டிக்கும் பிரேரணை

இரண்டாவது முயற்சியாக டேவான் ராக்யாட்டில் நிறை வேற்றப்பட்டது. மொத்தம் 111 எம்.பி.க்கள் ஆதரவாக வாக்களித்த நிலையில் இந்த பிரேரணை தொகுதி வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. மேலும் 88 பேர் எதிராக வாக்களித்தனர், 21 பேர் வாக்களிக்கவில்லை. அன்று அந்த சட்டம் நிறைவேற்றப் படாமல் இருந்தால், அந்த சட்டம் இயற்கையான மரணம் அடைந்திருக்கும். அதாவது, அந்த சட்ட விதியின் காலம் 31 ஜூலை 2022 முடிகிறது. என்றும், அதன்பின் இச்சட்டத்தின் கீழ் எவரையும் கட்டுப்படுத்த முடியாது என்பதை ம இ க தலைவர்கள் உணர்ந்திருக்க வேண்டும் முக்கியமாக ம. இ.கா அமைச்சர். ஆக அப்படிப்பட்ட நிலையில் அதன் ஒரே நாடாளுமன்ற உறுப்பினரின் ஆதரவு அந்த பிரேரணைக்கு வழங்க தடுத்து வைக்கப்பட்ட சொஸ்மா கைதிகளின் விடுதலைக்கு உள் துறை அமைச்சரிடம் பேரம் பேசி இருக்கலாம் அல்லது வரும் பொது தேர்தலில் இந்தியர்களின் வாக்குகளை பெற தாங்கள் இப்படிப்பட்ட சட்டங்களை வெளிப்படையாக எதிர்க்க நேரிடும் என்ற மிரட்டலாவது விட்டிருக்கலாம். ஆனால் ம.இ.கா இது எதையும் செய்ய வில்லை. வஞ்சிக்கப்பட்ட மக்களுக்கு உதவ முன் வருவதாக கூறி அவர்களை மேலும் சிக்கலில் மாட்டி விட்டு வேடிக்கை பார்ப்பதில் கில்லாடிகள் என்பதால் ம.இ.கா வை ஆங்கிலத்தில் C கோமாளி கட்சி என்பார்கள். கடந்த 19ந் தேதி, கோலக்குபு பாரு நீதிமன்றத்தில் இந்திய சமுதாயம் எதிர் நோக்கிய சம்பவம் , ம.இ.கா வின் கோமாளித் தனத்தை உறுதி படுத்துவதாகவும், வெந்த புண்ணில் வேல் பாய்ச்சும் விதமாக இருந்தது, என்கின்றனர் மக்கள். ஒரு சிக்கலுக்கு தீர்வு காண கண்ணுக்கு தெரியும் எளிதான வழி முறையை விட்டு, அப் பிரச்சனையை மேலும் சிக்கலாக்கி அதில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வரும் பெருந் துன்பத்தை விட இடைத்தரகர்களுக்கு கிட்டும் அற்ப சுகத்திற்காக ஒரு சமுதாயத்தை பலியிடும் போக்கு என்று மறைகிறதோ அன்றுதான் மலேசிய இந்தியர்களுக்கு பொற்காலம்.

அதனை நிரூபிக்கும் வண்ணம் இரண்டு சம்பவங்கள் நடந்தேறின. கடந்த 19ந் தேதி கோலக்குபு பாரு நீதிமன்றத்தில் நடந்த ஒரு தீர்ப்புக்கு பின் ஒப்பாரி வைக்கும் தாய்மார்களுடன் நூற்றுக்கணக்கான இந்தியர்களை காட்டிய ஒரு வீடியோ காணொளியில்

ஒரு ம.இ.க பிரமுகரின் வீர வசனம், அதன் பின் வழக்க றிஞ்சர் விளக்கம். அந்த மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என்றால். தடுத்து வைக்கப் பட்டவர்கள் விடுதலைக்கு அரசியல் தீர்வு காணுங்கள், ம.இ.கா அமைச்சர், உள்துறை அமைச்சர் மற்றும் சட்டத் துறை தலைவர் மனது வைத்தால் மட்டுமே அதற்கு மாற்றம் உண்டு என ஒரு பொது நல அபிமானி, தனது முன் அனுபவத்தை பகிர்ந்துக் கொண்டிருந்தார். ஆனால் அன்று தடுத்து வைக்கப்பட்ட 26 இந்தியர்களும் இரண்டு வாரங்களில் விடுதலை கிடைக்கும் சாத்தியத்தை மறந்து அல்லது மறைத்து இந்த நீதிமன்ற நாடகத்தை ம.இ.கா அரங்கேற்றியதன் நோக்கம் என்ன என்பதே இன்றைய கேள்வி? ஆனால், 28 நாட்களுக்கு எந்த தடையு மின்றி போலீசாரின் முழு கட்டுப்பாட்டில் கைதிகளை வைத்திருக்க முழுமனதுடன் நாடாளு மன்றத்தில் வாக்களித்து விட்டு, ம.இ.கா வே , அவர்களுக்கு வாதாட வக்கீல்களை நியமிப்பது வேடிக்கையாக உள்ளது

## எதிர்வரும் 15ஆம் பொதுத்தேர்தலில்

# சேவை முனைப்புக் கொண்ட மக்கள் பிரதிநிதிகள் தேவை

நாட்டின் 15ஆவது பொதுத் தேர்தல் விரைவில் வர உள்ளது . அதற்கான அறிகுறிகள்தென்படுகின்றன. இந்நிலையில், மலேசியா குடிமக்கள் என்றும் இல்லாத அளவிற்குச் சவால்களை எதிர்நோக்கி உள்ளனர். குறிப்பாக, ஏழ்மை நிலையில் உள்ளவர்கள் மிகுந்த இன்னல்களை எதிர்கொள்கின்றனர். மத்திய, மாநில அரசுகள் அவர்களின் சுமைகளைத் தீர்க்கும் எனப் பெரிதும் எதிர் பார்த்திருக்கின்றனர்.

இவ்வேளையில், நம் சமூகச் சிக்கல்களை அறிந்த, நன்கு உணர்ந்த மக்கள் பிரதிநிதிகள் அல்லது நிகராளிகள் தேவை, அவசியம். வாக்காளர்களின் சிக்கல்களுக்கு ஏற்ற தீர்வுகள் முன்னெடுத்துச் செல்லும் வேட்கை மிகுந்த அரசியல்வாதிகள்தான் நமக்கு தேவை. சுயநலம் மிக்க, உதட்டளவில் மட்டும் சிக்கல்களை தீர்த்து விடுவதாகச் சொல்பவர்கள் தேவையில்லை. இன்றைய நிலையில், சிறுபான்மை யினர் நலன் மீது கவனம் செலுத்த வேண்டியதேவை உள்ளது. மலாய்க்காரர்களின் நலன் காக்கப்படுவதை அரசும் அதன் துணைநிறுவனங்களும் உறுதி செய்கின்றன. அதே சமயம், நாட்டிலுள்ள அதிகஎண்ணிக்கையிலான மலாய் அரசியல்வாதிகளும் துணையாக உள்ளனர்.

ஆனால், இதே போன்று, பெரும் சவால்களை எதிர் கொண்டுள்ள சிறுபான்மை யினரின்பிரச்சனைகளை தீர்ப்பதில் போதிய கவனம் செலுத்தப்படவில்லை. ஒருதேர்தல் முடிந்து, மற்றொரு தேர்தல் எனப் பல தேர்தல்கள் வந்தும், இந்தியர்களின்சிக்கல்கள் அப்படியேதான் உள்ளன. முதன் முதலாக, ஏப்ரல் 2017 இல் மத்திய அரசால் முன்னெடுக்கப்பட்ட இந்தியர்களுக்கான பெருந்திட்டம் அதிகாரப்பூர்வமாக அறிமுகப்படுத்தப்பட்டது. இதற்கு முன்னர் இருந்த இவ்வாறான முயற்சிகள் யாவும் கற்றோரின்முன்னெடுப்பாகவோ, சமூக இயக்கங்களின் முயற்சியாகவோ, அரசியல் கட்சிகளின் முன்னெடுப் புகளாகவோ மட்டுமே இருந்துள்ளன. மலேசியாவில் சிறுபான்மையினரின் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு இரண்டு சாராரின் உள்ளீடுகள் தேவையாக உள்ளன. முதலாவதாக, அச்சிக்கல்களைத் தீர்ப்பதற்கான தீர்க்கமான மாற்றங்களைச் செய்யும் முனைப்புடைய அரசு; அடுத்து, அச்சிக்கல்களைப் புரிந்து கொண்டு, அவற்றிற்கான மாற்றங்களை முனைப்புடன் முன்னெடுத்துச் சென்று தீர்க்கும் வல்லமை உடைய மக்கள் பிரதிநிதிகள் அல்லது நிகராளிகள். எனவே, ஆளும் அரசில் இந்தியர்களின் சிக்கல்களைத் தீர்ப்பதில் முனைப்புக் காட்டுவோர் தேவைப்படுகின்றனர். இந்தச் சூழலில்தான் உதட்டளவில் தேவை செய்வதாகக் கூறி கொண்டு சிலர்உள்ளனர்.



தேர்தல் காலத்தில் பரிசளிப்பு களைத் தந்து கொண்டு புலனத்தில்பதிவேற்றம் செய்துவிட்டு, இந்தியர்களின் சிக்கல்கள் தீர்ந்து விட்டதாக எண்ணிக்கொள்கின்றனர். அவர்களின் சுய அரசியல் பிழைப்புக்காக இந்தியர்களின் சிக்கல்களுக்கு உண்மையான உருப்படியான தீர்வுகளுக்கான முயற்சிகளையும் முன்னெடுப் புகளும் செய்வதில்லை. உண்மையில், இத்தகைய அரசியல்வாதிகள் இந்தியச் சமுதாயத்தின் துரோகிகளாவர். மலேசியாவில் இந்திய மக்கள் பிரதிநிதிகள், இந்தியர்களின் மீது மட்டுமே கவனம்செலுத்த வேண்டும் எனக் கூற வரவில்லை. ஆனால், அவர்கள் ஒட்டு மொத்த இந்திய சமுதாயச் சிக்கல்களில் சற்று கூடுதல் அக்கறையும் கவனமும் செலுத்த வேண்டும் என்கிறோம். இறுதியாக, முன்னர் குறிப்பிட்டது போன்று, இந்தியச் சமுதாயச் சிக்கல்களை உள்ளபடியே தீர்க்கும் வேட்கையும், ஆற்றலும் உள்ளவர்களையே இந்திய வேட்பாளர்களாக அரசியல் கட்சிகள் முன்மொழிய வேண்டும். இந்தியர்களின் நாடித் துடிப்பை அறிந்த, இந்தியச் சமுதாயத்தின் அடிமட்டத்தில் தேவை செய்து கொண்டிருக்கும் ஆற்றல் மிக்க பலர் இந்திய அரசு சாரா இயக்கங்களில் உள்ளனர்.

அவர்களுள் ஏற்றவர்களை அடையாளம் கண்டு வேட்பாளர்களாக களத்தில் நிறுத்துங்கள். ஆற்றலும் ஏற்ற திறமும் திறனும் கொண்ட இத்தகையோர் இந்தியச் சமுதாயத்தின் இன்றைய சிக்கல்களுக்குத் தீர்வு காண வல்லவர்கள்.

எழுத்து - சமூகப் பணியாளர் மற்றும் ஆர்வாளர் எஸ்.பி.நாதன்

# சமூகத் தலைவரை அறிவோம்: டி.சந்திரசேகரன் (டுசுன் துவா தொகுதி)

டுசுன் துவா தொகுதிக்கான சமூகத் தலைவராக பொறுப்பு வகிக்கும் சந்திரசேகரன் த/பெ தேவசிகாமணி இம்மாத சமூ கத் தலைவரை அறிவோம் அங்கத்தில் இடம் பெறுகிறார். ஜசெக பிரதிநிதியான இவர் கடந்த 2021 ஆம் ஆண்டு முதல் இத்தொகுதிக்கான சமூகத் தலைவராக பொறுப்பு வகித்து வருகிறார்.



தொகுதியில் உள்ள இந்தியர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகளை சட்டமன்றஉறுப்பினர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினரின் கவனத்திற்கு கொண்டுச் சென்று தீர்வு காண்பது மற்றும் மாநில அரசின் மக்கள் நலத் திட்டங்களை மக்களுக்கு எடுத்துரைத்து அத்திட்டங்களில் அவர்கள் பங்கு பெறுவதை உறுதி செய்வது போன்ற பணிகளை தாம் மேற்கொண்டு வருவதாகசந்திரசேகரன் கூறுகிறார்.

கோவிட்-19 பெருந்தொற்று சமயத்தில் இந்தியர்கள் கணிசமாக வசிக்கும் தாமான் ஸ்ரீ நண்டிங் மற்றும் தாமான் பெர்க்காசா உலு லங்காட்பகுதிகளில் உணவுப் பொட்டலங்களை டுசுன் துவா சட்டமன்ற உறுப்பினர் எட்டி ஃபைசால் ஒத்துழைப்புடன் உணவுப் பொட்டலங்களை விநியோகம் செய்ததாக அவர் குறிப்பட்டார்.

லைஃப் கேர் மற்றும் டோன் வாவ் அமைப்புகளின் ஒத்துழைப்புடன் செராஸ் தாமான் கியுபெக்ஸ் ராயா சமூக மண்டபத்தில் மக்கள் உதவித் திட்டத்தை நடத்தினோம். தீபாவளி பண்டிகையின் போது மாநில ஆட்சிக்குழு உறுப்பினர் வீ.கணபதிராவ் ஏற்பட்டில் வழங்கப்பட்ட பலகார தயாரிப்பு பொருள்களை வசதி குறைந்தவர்களுக்கு பகிர்ந்தளித்தோம். மேலும், கடந்தாண்டு இறுதியில் ஏற்பட்ட வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு சமூக அமைப்புகளின் ஒத்துழைப்புடன் உணவு, உடைகள் போன்ற உதவிகளை வழங்கினோம் என்றார் அவர். தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் தன்னார்வ அடிப்படையில் தாம் பணியாற்றி வரும் காரணத்தால் உதவி நாடி அலுவகலத்திற்கு வரும் மக்களுக்கு குறிப்பாக மூத்த குடிமக்கள் மற்றும் தனித்து வாழும் தாய்மார்களுக்கு வேண்டிய உதவிகளை எளிதாக செய்ய முடிவதாக அவர் குறிப்பிட்டார்.

# கட்சித் தாவல் தடைச் சட்டம் மக்களுக்கு கிடைத்த வெற்றி



## அன்வார் வர்ணனை

கோலாலம்பூர்:-
நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சித் தாவுவதைத் தடுக்க வகை செய்யும் சட்டம் நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நிறைவேற்றப்பட்டது மக்களுக்கு கிடைத்த வெற்றியாகும் என்று எதிர்க்கட்சித் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் வர்ணித்தார்.

இதன் வழி பக்கத்தான் ஹராப்பான் கூட்டணிக்கும் அரசாங்கத்திற்கும் இடையே செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் ஷரத்து நிறைவேற்றப்பட்டுள்ளது குறித்து தாம் மனநிறைவு கொள்வதாக பி.கே.ஆர். கட்சித் தலைவருமான அவர் சொன்னார். இந்த மசோதாவை சட்டமாக்குவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என அந்த ஒப்பந்தத்தில் வலியுறுத்தப்பட்டிருந்ததாக அவர் தெரிவித்தார். இந்த சட்டத்திருத்தத்திற்கு ஆதரவாக 209 உறுப்பினர்கள் வாக்களித்தனர். இவ்விவகாரத்தில் பக்கத்தான் உறுப்பினர்கள் உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டிருந்தனர் என்றார் அவர்.

இது மக்களின் வெற்றியாகும். இனி வாக்களிக்கும் போது நாம் நம்பிக்கையுடன் இருக்கலாம். அச்சுறுத்தல், பண மற்றும் பதவி ஆசை காரணமாக கட்சித் தாவுவது இனியும் நிகழாது என தனது பேஸ்புக் பக்கத்தில் வெளியிட்ட காணொளி ஒன்றில் அவர் குறிப்பிட்டார்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சித் தாவுவதை தடை செய்யும் சட்ட மசோதா நேற்று முன்தினம் மக்களவையில் மூன்றில் இரு மடங்கு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டது.

# கட்சித் தாவல் தடைச் சட்டம் ஜனநாயகத்தின் மறுமலர்ச்சிக்கு உதவும்? ஹராப்பான் நம்பிக்கை



ஷா ஆலம்:-
நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சித் தாவுவதை தடுக்கும் சட்ட திருத்தம் வரலாற்றுப்பூர்வமான ஒன்று என்பதோடு மக்களுக்கு கிடைத்த மிகப்பெரிய வெற்றியாகவும் விளங்குகிறது என்று பக்கத்தான் ஹராப்பான் கூட்டணி கூறுகிறது. நேற்று நாடாளுமன்றத்தில் இந்த சட்டத் திருத்த மசோதா நிறைவேற்றப்பட்டதன் மூலம் தேர்தல் நடைமுறை மற்றும் ஜனநாயகம் மீதான மக்களின் நம்பிக்கையை மீண்டும் மலரச் செய்துள்ளது என்று ஹராப்பான் தலைமைத்துவ மன்றத் தலைவர் மன்றம் தெரிவித்தது. எனினும், ஷெரட்டோன் நகர்வு போன்ற துரோகச் செயல்கள் மீண்டும் நிகழாதிருப்பதை உறுதி செய்வதற்கு நாட்டின் அரசியல் சூழல் மற்றும் ஜனநாயகத்தில் நிறைய மாற்றங்களைச் செய்ய வேண்டியுள்ளது என்று என அது குறிப்பிட்டது.

இந்த சட்டத் திருத்த மசோதா நிறைவேற்றப்பட்டதன் மூலம் அரசாங்கத்திற்கும் எதிர்க்கட்சிகளுக்குமிடையே கையெழுத்தான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் 18 அம்சங்களில் 15 நிறைவேற்றப்பட்டு விட்டது என அந்த கூட்டணி வெளியிட்ட அறிக்கை ஒன்று தெரிவித்தது.

இருந்த போதிலும் இன்னும் அந்த ஒப்பந்தத்தில் இடம்பெற்றுள்ள எஞ்சிய மூன்று அம்சங்கள் இன்னும் நிறைவேற்றப்படவில்லை. பிரதமர் பதவியை 10 ஆண்டுகளுக்கும் மேற்போகாத வரையில் கட்டுப்படுத்துவது, நாடாளுமன்றச் சேவை சட்டமசோதாவை தாக்கல் செய்து நிறைவேற்றுவது மற்றும் மக்களவையும் மேலவையும் மேலும் சீரான முறையில் நடைபெறுவதற்கு ஏதுவாக கூட்ட விதிகளில் திருத்தம் கொண்டு வருவது ஆகியவையே அந்த மூன்று அம்சங்களாகும்.

மேலும் நீதித்துறை எப்போதும் சுதந்திரமாக செயல்படுவதை உறுதி செய்வது தொடர்பான 4வது விதியும் நிறைவேற்றப்பட வேண்டும் என அந்த கூட்டணி வலியுறுத்தியது.



# அரசியல் நிலையற்ற தன்மைக்கு பிஎன் தான் காரணம்

பெட்டாலிங் ஜெயா:-
பாரிசான் நேஷனல் (பிஎன்) தலைவர்கள் அடிக்கடி வாதிடும் அரசியல் ஸ்திரத்தன்மை பிரச்சாரம் இந்த நாட்டில் நிலையற்ற தன்மையை ஏற்படுத்தும் அவர்களின் நடவடிக்கைகளுக்கு முரணானது. பிஎன் தலைவர்கள் புதிய அரசாங்கத்தில் சேருவதற்கு முன்பு தேர்தலில் வெற்றி பெற்ற அரசாங்கத்தை வீழ்த்தி பின்னர் டான்ஸ்ரீ முகிடின் யாசினை வீழ்த்துவதில் ஈடுபட்டுள்ளனர் என்றார் என்று சிலாங்கூர் மக்கள் நீதிக் கட்சி (கெஅடிலான்) மாநிலத் தலைமைக் குழுத் தலைவர் கூறினார். முகிடின் தலைமையிலான அரசாங்கத்திலிருந்து புத்ராஜெயாவின் அரசாங்கத்தை அவர்கள் கைப்பற்றிய பிறகு மாநிலத் தேர்தல் நடந்ததை டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரியும் பிஎன் தலைமைக்கு நினைவூட்டினார்.

"ஸ்திரத்தன்மையை வெளியில் கொண்டு வராதவர்கள், ஸ்திரத்தன்மையைக் கொண்டு வந்ததாக கூறி, மக்களை தங்களுக்கு வாக்களிக்கச் சொல்கிறார்கள்," என்று அவர் ஜூலை 24 அன்று கூறினார்.





## கிள்ளான், கம்போங் ஜாவா,
# சி.பி.பி.எஸ். ஸ்ரீ மகா மாரியம்மன் ஆலயம்
## உதவிக் கரம் ஏந்துவோருக்கு அபயக் கரம் நீட்டும் திருத்தலம்

இந்தியர்கள் கனிசமான எண்ணிக்கையில் வசிக்கும் கிள்ளான் வட்டாரத்தில் பக்தர்களின் வழிபாட்டிற்காக பல ஆலயங்கள் உள்ளன. பக்தர்களுக்கு பக்தி மார்க்கத்தை போதிக்கும் அதே வேளையில் இன்னலில் பரிதவிப்போருக்கு உதவிக் கரம் நீட்டும் உன்னத பணியையும் அவ்வாலயங்கள் மேற்கொண்டு வருகின்றன.

அந்த வகையில் பக்தி நெறியையும் மக்கள் பணியையும் இரு கண்களாக கருதி அரும்பணியாற்றி வருகிறது கிள்ளான், கம்போங் ஜாவா, (கானாட் பிரிட்ஜ் மின்சார நிலையம்) ஸ்ரீ மகா மாரியம்மன் ஆலயம். இந்த ஆலயம் நூறு ஆண்டுகளுக்கும் மேல் வரலாற்றைக் கொண்டிருந்தாலும் தோட்டத் துண்டாடல், நில உரிமை போன்ற பிரச்னைகளால் அலைக்கழிக்கப்பட்டு 90ஆம் ஆண்டு களில்தான் தனக்கான நிலையான இடத்தைப் பெற்றது. கிள்ளான், கம்போங் ஜாவாவிலுள்ள போர்ட் சுவெட்டன்ஹாம் தோட்டத்தில் கடந்த 1908 ஆம் ஆண்டில் ஆலயம் அமைக்கப்பட்டது. தற்போதுள்ள தாமான் ஆலம் ஷா வீடமைப்பு பகுதிதான் அந்த ஆலயத்தின் பூர்வீகமாக இருந்தது.

1960 ஆம் ஆண்டுகளில் விஸ்வரூபமெடுத்த தோட்டத் துண்டாடல் பிரச்னை இந்த ஆலயத்தையும் விட்டு வைக்கவில்லை. கடந்த 1974 ஆம் ஆண்டில் ஆலய நிலம் வீடமைப்புத் திட்டத்திற்காக அதன் உரிமையாளர்களால் தகுதி மாற்றம் செய்யப்பட்டது. அதோடு மட்டுமின்றி மலாய் ரிசர்வ் நிலத்தில் அமைந்துள்ள காரணத்தால் அவ்வாலயம் அங்கிருந்து அகற்றப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டது. ஆலய நிர்வாகத்தினருக்கும் மேம்பாட்டாளருக்கும் இடையே நடைபெற்ற பல கட்டப் பேச்சு வார்த்தையின் பலனாக மாற்று நிலம் வழங்கப்பட்டது.

எனினும் அந்த நிலம் சதுப்பு நிலமாக இருந்த காரணத்தால் ஆலய நிர்வாகத்தினர் அதனை ஏற்க மறுத்து விட்டனர்.இந்நிலையில் ஆலயம் தற்போது அமைந்துள்ள இடம் பக்தர்களின் நன்கொடை மூலம் 10,000 வெள்ளிக்கு வாங்கப்பட்டது. இந்த ஆலயத்தின் நிர்மாணிப்புக்காக அமரர் டான்ஸ்ரீ வெ.மாணிக்கவாசகம் 1969 ஆம் ஆண்டில் 25,000 வெள்ளி மானியம் வழங்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

நிலத்தை தகுதி மாற்றம் செய்யும் பணிகளில் ஏற்பட்ட தாமதம் காரணமாக ஆலய நிர்மாணிப்பில் 1984 ஆம் ஆண்டு வரை சுணக்கம் ஏற்பட்டது. அதன் பின்னர் சுமார் ஆறு லட்சம் வெள்ளி செலவில் ஆலயம் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு கடந்த 1994 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதி முதல் கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது. இரண்டாவது கும்பாபிஷேகம் கடந்த 2010 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட வேளையில் மூன்றாவது கும்பாபிஷேகத்தை விரைவில் நடத்துவதற்கான ஏற்பாடுகளைத் தாங்கள் செய்து வருவதாக ஆலயத் தலைவர் கு.ராமசாமி குறிப்பிட்டார்.

தொடக்கத்தில் ஒரு வீட்டு மனை நிலத்தில் நிர்மாணிக்கப்பட்ட இந்த ஆலயம் தற்போது பக்தர்கள் மற்றும் கொடை நெஞ்சர்களின் ஆதரவுடன் சுமார் 2.5 ஏக்கர் பரப்பளவில் ஆறு லாட் நிலங்களைப் பெற்றுள்ளது என அவர் சொன்னார்.

ஆலயத்தின் சமூகப் பணிகள் இந்த ஆலயம் வெறும் வழிபாட்டுத தலமாக மட்டுமின்றி சமூக மையமாகவும் செயல்பட்டு வருகிறது. கோவிட்-19 பெருந்தொற்று, வெள்ளம் போன்ற பேரிடர்களின் போது பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிகளை

வழங்கியுள்ளதோடு வசதி குறைந்தவர்களுக்கும் பள்ளிகளுக்கும் இயன்ற உதவிகளை வழங்கி வருகிறோம் என்றார் அவர்.

கோவிட்-19 பெருந்தொற்று சமயத்தில் சுற்றுவட்டாரத்திலுள்ள வசதி குறைந்த 60 குடும்பங்களுக்கு தலா 120 வெள்ளி மதிப்பிலான உணவுப் பொருள்களை இரண்டு முறை வழங்கினோம். இதுதவிர புடவைகள் மற்றும் சமைத்த உணவுகளையும் விநியோகம் செய்தோம்.

கடந்தாண்டு டிசம்பர் மாத இறுதியில் ஏற்பட்ட வெள்ளத்தின் போது பொது மக்கள் மற்றும் சமூக அமைப்புகள் வழங்கும் உதவிப் பொருள்களை சேகரித்து வைக்கும் மையமாக இந்த ஆலயம் செயல்பட்டது. இந்த சங்கத்தின் ஒத்துழைப்புடன் இந்த பொருள்களை வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட தாமான் ஸ்ரீ மூடா உள்ளிட்ட பகுதிகளில் உள்ளவர்களுக்கு பகிர்ந்தளித்தோம்.

மேலும், பகாங் மாநிலத்தின் மாரானில் வெள்ளம் ஏற்பட்ட போது சுமார் 5,000 வெள்ளி மதிப்புள்ள உதவிப் பொருள்களை சேகரித்து அங்குள்ள நம் மக்களுக்கு வழங்கினோம். இதுதவிர, கேரித்தீவு தமிழ்ப்பள்ளிக்கு மேசை,நாற்காலிகள், எழுது பொருள்களோடு நான்கு குளிர்சாதனங்களையும் ஆலயம் சார்பாக வழங்கினோம் என அவர் சொன்னார்.

இளையோர் மத்தியில் சமய அறிவை வளர்க்கும் நோக்கில் தேவார வகுப்புகள், சமய சொற்பொழிவு மற்றும் பரதநாட்டியப் பயிற்சி அன்னையர் தின விழா போன்ற நிகழ்வுகளும் நடத்தப்படுகின்றன என்று அவர் குறிப்பிட்டார். இந்த ஆலயத்தில் சிறப்பு விழாக்களாக ஆடிப்புரம், விநாயகர் சதுர்த்தி மற்றும் பைரவர் பூஜை கொண்டாடப்படுகிறது.

### மாநில அரசின் உதவி

இந்த ஆலயத்திற்கு சிலாங்கூர் அரசு அளப்பரிய உதவிகளை வழங்கி வருவதாக ராமசாமி குறிப்பிட்டார். 2009 ஆம் ஆண்டு முதன் முறையாக மாநில அரசு இந்த ஆலயத்திற்கு 30,000 வெள்ளியை வழங்கிய வேளையில் அதற்கு அடுத்து ஆட்சிக்குழு உறுப்பினர் வீ.கணபதிராவ் அவர்கள் தலா 10,000 வெள்ளியை இரு முறை வழங்கினார். இது தவிர, செந்தோசா சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் குணராஜ் ஜோர்ஜ் தலா 3,000 வெள்ளியை இரு முறை வழங்கினார். சுங்கை காண்டீஸ் சட்டமன்ற உறுப்பினர் முகமது ஜவாவி அகமது முக்னி வாயிலாக 1,500 வெள்ளி பெறப்பட்டது என்றார் அவர்.

### ஆலயத்தின் எதிர்காலத் திட்டம்

தற்போது உள்ள 250 பேர் வரை அமரக்கூடிய மண்டபத்திற்கு பதிலாக 1,000 பேர் வரை அமரக்கூடிய மண்டபத்தை கட்டுவது, ஆலய வளாகத்தை முழுமையாகச் சீரமைப்பு செய்து சீரான மற்றும் பசுமையான தோற்றத்தை ஆலயத்திற்கு ஏற்படுத்துவது உள்ளிட்ட திட்டங்களை அமல்படுத்த தாங்கள் திட்டமிட்டுள்ளதாக அவர் சொன்னார். ஆலயத்திற்கு அருகிலுள்ள அரை ஏக்கர் டி.ஓ.எல்.நிலத்தை ஆலய நடவடிக்கைகளுக்கு பயன்படுத்திக் கொள்வதற்கான அனுமதியைக் கோரி தாங்கள் மாநில அரசிடம் மனு செய்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.




# எளிமையின் வடிவாய் விளங்கும் எஸ்கோட் தோட்டத் தமிழ்ப்பள்ளி

**இந்நாட்டில் தமிழ்ப்பள்ளிகளின் வாழ்வாதாரத்திற்கு அடித்தளமாக விளங்கியவை தோட்டப்புறங்கள்தான். தோட்டங்களின் எண்ணிக்கை காலப்போக்கில் குறையக் குறையத் தமிழ்ப்பள்ளிகளின் ஆயுளும் அருகிக் கொண்டே வருகிறது. தோட்டங்கள் தடம் மாறினாலும் பாட்டாளிகள் ஆளுக்கொரு திசையில் இடம் மாறினாலும் தோட்டங்களின் வரலாறு சிதிலங்களாய்ச் சிதைந்து போகாமல் உயிர்ப்போடு வைத்திருக்கும் வெகு சில பள்ளிகளில் ஒன்றுதான் எஸ்கோட் தோட்டத் தமிழ்ப்பள்ளி.**

சிலாங்கூரின் வடகோடி மாவட்டமான உலுசிலாங்கூரில் பேராக் மாநில எல்லையில் தஞ்சோங் மாலிம் பட்டிணம் அருகே அமைந்துள்ளது இப்பள்ளி. பிரதானச் சாலையிலிருந்து சுமார் ஒரு கிலோமீட்டர் பயணித்தால் ஆள் அரவமற்ற இடத்தில் அமைதியாய் வீற்றிருக்கும் இப்பள்ளியை அடையலாம். தவமிருக்கும் முனிவரை போல் தனித்திருக்கிறது இப்பள்ளி. பள்ளிக்குத் துணையாக அருகில் அம்மன் ஆலயம். இப்பள்ளியில் பிரமிக்கவைக்கும் பிருமாண்டம் இல்லை. வர்ணிக்க வார்த்தை ஜாலங்களும் தேவையில்லை. ஆனாலும் இயற்கையோடு ஒன்றிய அதன் எளிய தோற்றம் நம் மனதில் இனம் புரியாத பரவசத்தை ஏற்படுத்துகிறது. ஒரு காலத்தில் கலகலப்பாகக் காணப்பட்ட எஸ்கோட் தோட்டத்தில் இப்போது யாரும் குடியிருக்கவில்லை. சில ஆண்டுகளுக்கு முன் தோட்டம் கைமாறியதைத் தொடர்ந்து பாட்டாளிகளும் வாழ்வாதாரம் தேடி வேறு இடங்களுக்குக் குடி பெயர்ந்து விட்டனர். இத்தோட்டத்திற்கு அருகிலுள்ள களும்பாங், தஞ்சோங் மாலிம் வட்டார மாணவர்கள்தான் இப்பள்ளிக்கு வந்து கொண்டிருக்கின்றனர்.



## பள்ளியின் வரலாறு

எஸ்கோட் பள்ளியின் வரலாறு இரண்டாம் உலகப் போருக்கு முன்பு இருந்து தொடங்குகிறது. தொடக்கத்தில் 100 சதுர அடி கூடாரத்தில் தோட்டத்தைச் சேர்ந்தபத்து மாணவர் களுடன் இப்பள்ளி ஆரம்பிக் கப்பட்டது. மாலை நேரத்தில் மட்டும்இயங்கிய இப்பள்ளியில் தோட்ட மண்டோரான முத்துசாமி என்பவர் ஆசிரியராகவும் செயல்பட்டார். பின்னர், எஸ்கோட் தோட்ட நிர்வாகத்தினரால் அந்தக் கூடாரம் இடிக்கப்பட்டுப் பள்ளிக்கூடம் நிர்மாணிக்கப்பட்டது சீராகச் செயல்பட்டு வந்த இப்பள்ளியின் தலையில் இடியென இறங்கியது இரண்டாம் உலகப் போர். போரினால் பள்ளிதற்காலிகமாக மூடப்பட்டது. சில ஆண்டுகளுக்குப் பின்னர் 20 மாணவர்களுடன்செயல்படத் தொடங்கினாலும் காலப்போக்கில் மாணவர்கள் எண்ணிக்கை 16ஆகச் சரிவு கண்டது.

எனினும், 1955 ஆம் ஆண்டில் தலைமையாசிரியராகப் பொறுப்பேற்ற ஏ.சுப்பிரமணியம் அவர்களின் அயரா முயற்சியால் மாணவர்கள் எண்ணிக்கை 29 ஆக உயர்வு கண்டு ஆறு வகுப்பறைகளுடன் முழுமையான பள்ளியாகச் செயல்படத் தொடங்கியது.

தொடக்கக் காலத்தில் பள்ளியில் மேசை,நாற்காலி போன்ற அடிப்படை வசதிகள் அறவே இல்லை. மாணவர்கள் தரையில் அமர்ந்துதான் பாடம் பயின்றனர். மாணவர்கள் எழுத்துகளை மணலில் எழுதிப் பழகும் காலத்தையும் இப்பள்ளி கடந்து வந்துள்ளது.

தற்போதுள்ள பள்ளிக் கட்டிடம் எஸ்கோட் தோட்ட நிர்வாகியாக இருந்த ஜ.டி.ரிப்ளே மேற்கொண்ட முயற்சியின் வாயிலாகச் சிலாங்கூர் மாநிலக் கல்வி இலாகா 50,000 வெள்ளி செலவில் கடந்த 1963 ஆம் ஆண்டில் நிர்மாணித்துத் தந்தது. மூன்று வகுப்பறைகள், ஆசிரியர், அறை கழிப்பறை வசதிகளை இப்பள்ளி கொண்டிருந்த வேளையில் 1980 ஆம் ஆண்டில் மைக்கல் சென் மூலம் மேலும் ஒரு வகுப்பறை கட்டப்பட்டது. சமீபத்தில் மேலும் மூன்று வகுப்பறைகள் நிர்மாணிக்கப் பட்டுள்ளன.

## பள்ளியின் வளர்ச்சி

தற்போது இந்த எஸ்கோட் தமிழ்ப்பள்ளி ஆறு வகுப்பறைகள், தகவல், தொழில்நுட்ப அறை, நூலகம், பூப்பந்து மைதானம், திடல் உள்ளிட்ட முழு அடிப்படை வசதிகளுடன் சிறப்பாகச் செயல்பட்டு வருவதாகக் கூறுகிறார் பள்ளியின் தலைமையாசிரியர் திருமதி என்.பரமேஸ்வரி.

இப்பள்ளி தற்போது 37 மாணவர்கள் மற்றும் பத்து ஆசிரியர்களுடன் செயல்பட்டு வருகிறது. 3.8 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள இப்பள்ளி அரசின் பகுதி உதவி பெற்ற பள்ளியாக விளங்கி வருகிறது என அவர் குறிப்பிட்டார்.

இப்பள்ளியின் சிறப்பு அம்சமாக விளங்குவது மாணவர்களால் உருவாக்கப்பட்ட மூலிகைத் தோட்டம் என்று அவர் சொன்னார். கற்பூரவள்ளி, துளசி, வில்வம், அறுபதாம் பச்சை போன்ற செடிகளை இங்கு நடவு செய்கிறோம். அவற்றை மாணவர்கள் மூலம் விற்பனை செய்து அதில் கிடைக்கும் வருமானத்தை மாணவர் நலனுக்குப் பயன்படுத்தும் அதேவேளையில் மூலிகையின் மகத்துவத்தையும் அவர்களுக்கு உணர்த்துகிறோம் என்றார் அவர்.

இதில் குறிப்பிடத்தக்க விஷயம் என்னவென்றால் ஒவ்வொரு மாணவ ருக்கும் ஒரு செடியை வளர்க்கும் பொறுப்பை ஒப்படைக்கிறோம். தினமும் அச்செடிகளுக்கு நீரூற்றுவது அவர்கள் பொறுப்பு. இந்தத் திட்டம் தாவரங்கள் மீது மாணவர்களைக் கரிசனம் காட்டச் செய்கிறது. தண்ணீர் ஊற்றாவிட்டால் செடி வாடி விடுமே என்ற அச்சத்தில் மாணவர்களைத் தினமும் பள்ளிக்கு வரச்செய்கிறது. மாணவர்கள் பள்ளிக்கு மட்டம் போடுவதையும் இதன் மூலம் தடுக்க முடிகிறது என்று அவர் குறிப்பிட்டார்.

## மாநில அரசின் மானியம்

சிலாங்கூர் மாநில அரசு இப்பள்ளியின் வளர்ச்சிக்குக் கடந்தாண்டு 45,000 வெள்ளியை மானியமாக வழங்கியது. மாநில அரசோடு மத்திய அரசும் பள்ளியின் வளர்சிகளுக்குத் தொடர்ந்து உதவிகளை வழங்கி வருகிறது என்றார் அவர்.

## பள்ளி நடவடிக்கைகள்

இப்பள்ளியில் கடந்தாண்டு அறிவியல் கண்காட்சி, சுதந்திரத் தினக் கொண்டாட்டம், போதை பொருள் ஒழிப்பு வாரம்,சுகாதார கருத்தரங்கு, நீலாம் வாசிப்புத் திட்ட அறிமுக விழா, தமிழ்ப் புதிர் போட்டி ஆகியவை நடைபெற்றன என அவர் குறிப்பிட்டார்.

# பொது மருத்துவமனை நெரிசலை சமாளிக்க, அலுவலக நேரத்திற்கு பிறகு சுகாதார கிளினிக்குகள் செயல்படுகின்றன

ஷா ஆலம்:-
மருத்துவமனைகளில் நெரிசல் பிரச்னைக்கு தீர்வு காண கிள்ளான் பள்ளத்தாக்கைச் சுற்றியுள்ள சில சுகாதார கிளினிக்குகள் (கேகே) இப்போது அலுவலக நேரத்திற்குப் பிறகு செயல்படுகின்றன.

உள்ளூர் தேவைகளைப் பொறுத்து கிளினிக் இரவு 9 அல்லது 10 மணி வரை திறந்திருக்கும் என்று சுகாதார துணை அமைச்சர் 1 கூறியதாக பெரித்தா ஹரியான் தெரிவித்துள்ளதுதுள்ளது.

டத்தோ டாக்டர் நோர் அஸ்மி கசாலியின் கூற்றுப்படி, உடனடி சிகிச்சை தேவைப்படும் சூழ்நிலைகளை எதிர் கொள்ளாதவர்கள் மருத்துவமனைகளில் அவசர சிகிச்சைப் பிரிவுகளில் இருப்பதைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

“நாங்கள் கோலாலம்பூர் மற்றும்




சிலாங்கூரில் உள்ள பல கிளினிக்குகளில் 'நீட்டிக்கப்பட்ட நேரம்' (அலுவலக நேரத்திற்கு வெளியே செயல்பாடுகள்) இரவு வரை நடத்துகிறோம்.

“தேர்ந்தெடுக்கப்பட்ட ஊழியர்களுக்கு ஷிஃப்ட்டுக்கு ஏற்ப பணி நேரம் இருக்கும். மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவுக்கு வரும் அனைவரும் சிவப்பு மண்டலத்தில் உட்கார முடியாது என்பதால் நோயாளிகளை தனிமைப்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகளில் இதுவும் ஒன்றாகும்.

“பச்சை மண்டலத்தில் உள்ளவர்கள் கேகே இல் மட்டுமே சிகிச்சை பெற முடியும், மருத்துவமனைக்குச் செல்ல வேண்டிய அவசியமில்லை,” என்று அவர் இன்று, மூன்றாவது உணவுமுறை அதிகாரி தரம் மற்றும் மதிப்பாய்வு மாநாட்டு திறப்பு விழாவில் கூறினார்.

அண்மைக்காலமாக மலேசிய சுகாதார அமைச்சின் கீழ் உள்ள கிளினிக்குகளில் நெரிசல் அதிகமாக இருப்பது தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

டாக்டர் நோர் அஸ்மி கூறுகையில், முன்பு அலுவலக நேரத்திற்கு வெளியே செயல்படுத்தப்பட்டது, ஆனால் கோவிட் -19 தொற்றுநோய் பரவுவதால் அது நிறுத்தப்பட்டது.

### போலீசாரின் தவறுகளை கண்டிக்க

# சுயேட்சை ஆணைய மசோதா நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது

கோலாலம்பூர், ஜூலை 27-
-நேர்மையை மேம்படுத்துதல், காவல்துறை அதிகாரிகளிடையே தவறான நடத்தைகளைக் குறைத்தல் மற்றும் பாதுகாப்புப் படை மீது பொதுமக்களின் நம்பிக்கையை அதிகரிப்பது ஆகியவற்றை நோக்கமாகக் கொண்ட போலீசாரின் தவறுகளை கண்டிக்க சுயேட்சை ஆணையம் (ஐபிசிசி) மசோதா 2020ஐ டேவான் ராக்யாட் நேற்று அங்கீகரித்தது.ஆகஸ்ட் 26, 2020 அன்று முதல் வாசிப்புக்கு சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் பல திருத்தங்கள் மற்றும் மேம்பாடுகளுக்குப் பிறகு மசோதா அங்கீகரிக்கப்பட்டது.உள்துறை அமைச்சர் டத்தோஸ்ரீ ஹம்சா ஜைனுடின், இந்த மசோதா மீதான விவாதத்தை முடித்துக் கொண்டிருக்கும் போது, லாக்-அப்பில் இறந்த சம்பவங்கள் உண்மையாகவே உள்ளன, ஆனால் இது போலீசாரால் ஏற்பட்ட காயங்களால் அல்ல, மாறாக கைதிகள் எதிர்கொள்ளும் நோய்களால் ஏற்பட்டது என்று கூறினார்.ஹம்சாவின் கூற்றுப்படி, கைதிகள் இறந்த நோய்களில் ஆஸ்துமா, எச்.ஐ.வி, இதய நோய், கல்லீரல் நோய், அல்சர் மற்றும் நுரையீரல் நோய் ஆகியவை அடங்கும், அதே நேரத்தில் கைதிகள் தூக்கில் தொங்குவது மற்றும் லாக்கப்பில் சண்டையிடும் சம்பவங்களும் உள்ளன.இதற்கிடையில், மத்தியஅரசியலமைப்புச் சட்டத்தின் 140 வது பிரிவில் உள்ள விதிகளின்படி, ஒழுக்கு நடவடிக்கைகள் மற்றும் தண்டனைகள் இன்னும் காவல் படை ஆணையத்திடம் (SPP) ஒப்படைக்கப்படும் அதே வேளையில், விசாரணைகளை மேற்கொள்வதற்கான அமைப்பை நிறுவுவதில் இந்த மசோதா கவனம் செலுத்துகிறது என்றார்.

“போலீஸ் நடத்தைக்கான சுயாதீன அலுவலகம் (யுனைடெட் கிங்டம்) மற்றும் சுயாதீன போலீஸ் புகார் கவுன்சில்




(ஹாங்காங்) ஆகியவற்றுடன் ஒப்பிட்டு இந்த மசோதா வரைவு செய்யப்பட்டது.
“இரண்டு சுயாதீன மைப்புகளும் தவறான செயல்களை விசாரிக்கும் அதிகாரங்களை மட்டுமே பயன்படுத்துகின்றன, மேலும் கண்டுபிடிப்புகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் நடவடிக்கைக்காக சமர்ப்பிக்கப்படும்,” என்று அவர் கூறினார்.



# சம்பளத்தை உயர்த்துங்கள்! இல்லையேல் மறியலில் ஈடுபடுவோம் கியூபெக்ஸ் எச்சரிக்கை

ஷா ஆலம்:-
நாடாளுமன்றம் கலைக்கப்படுவதற்கு முன்னர் அரசு ஊழியர்களின் சம்பளம் உயர்த்தப்பட வேண்டும் என்றும் தவறினால் சாலை மறியலில் தாங்கள் ஈடுபடப் போவதாகவும் அரசு ஊழியர்கள் தொழிற்சங்கமான கியூபெக்ஸ் எச்சரித்துள்ளது. கிரேட் 19 பிரிவு ஊழியர்களின் சம்பளம் கிரேட் 29க்கு உயர்த்தப்பட வேண்டும் என்ற தங்களின் நீண்ட நாள் கோரிக்கைக்கு புத்ரா ஜெயா செவிசாய்க்காமல் இருப்பதால் இந்நடவடிக்கையை தாங்கள் மேற்கொள்வதாக கியூபெக்ஸ் தலைவர் அட்னான் மாட் கூறியதாக ஃப்ரி மலேசிய டுடே இன்று செய்தி வெளியிட்டுள்ளது.

நாடாளுமன்றம் கலைக்கப்படுவதற்கு முன்னர் அவர்களின் சம்பளம் மறு ஆய்வு செய்யப்படாவிட்டால் அரசு ஊழியர்களுடன் இணைந்து புத்ரா ஜெயாவில் மறியலில் ஈடுபட கியூபெக்ஸ் தயாராக உள்ளது என அவர் சொன்னார்.நடப்பு சம்பள கட்டமைப்பு கடந்த 2002 ஆம் ஆண்டில் அமல்படுத்தப்பட்டதாக கூறிய அவர், நடப்புச் சூழலுக்கேற்ப அச்சம்பள முறை மறுஆய்வு செய்யப்படுவது அவசியம் என்றார்.விலைவாசி உயர்வு மற்றும் வாழ்க்கைச் செலவின அதிகரிப்பைக் கருத்தில் கொண்டு அரசு ஊழியர்களின் சம்பள உயர்வு கோரிக்கையை அங்கீகரிக்கும்படி கியூபெக்ஸ் அரசாங்கத்தை கடந்த வாரம் வலியுறுத்தியிருந்தது.

தேர்தலுக்கு முன்னர் விலைவாசி குறைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தியும் தாங்கள் இந்த மறியலை நடத்தப்போவதாக அட்னான் கூறினார்.

# ஷா ஆலம் விளையாட்டு வளாகத்தின் மறுவடிவமைப்பு

## சுற்றியுள்ள பகுதியின் வணிக மற்றும் பொருளாதார மதிப்பு உயர்வுக்கும் உதவும்



ஷா ஆலம்:-

ஷா ஆலம் விளையாட்டு வளாகத்தின் மறுவடிவமைப்பு நகரைச் சுற்றியுள்ள வணிக மதிப்பில் தாக்கத்தை ஏற்படுத்தும், இதனால் பொருளாதாரத் துறையின் வளர்ச்சிக்கு உதவும்.ஸ்டேடியத்தைச் சுற்றியுள்ள நிலத்தின் ஒரு பகுதி குடியிருப்புப் பகுதியாகவும், பொருத்தமான வணிகக் கட்டிடங்களாகவும் கட்டப்படும் என்று டத்தோ மந்திரி புசார் கூறினார்.“ஸ்டேடியம் பகுதியை முழுமையாகவும், செக்சென் 13 சுற்றுச்சூழலுக்கு ஏற்பவும் உருவாக்க மாநில அரசு விரும்புகிறது என்பது உறுதி.

“இந்த ஸ்டேடியம் 2025 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படும் மாஸ் டிரான்ஸிட் (எம்ஆர்டி) அருகில் இருப்பதால், இந்த மைதானம் முக்கிய ஈர்ப்பாகவும், சமூகத்திற்கு வசதியாகவும் இருக்கும்” என்று டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி இன்று சிலாங்கூர் மாநில சட்டமன்ற அமர்வில் கூறினார். ஸ்டேடியம் வளாகத்தின் மேம்பாடு தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் டத்தோ ரிசாம் இஸ்மாயிலின் கேள்விக்கு அவர் பதிலளித்தார்.ஜூலை 15 அன்று, மாநில அரசு ஷா ஆலம் ஸ்டேடியத்தை மேம்படுத்துவதற்கு மலேசியன் ரிசோர்சஸ் கார்ப்பரேஷன் பெர்ஹாட் (எம்ஆர்சிபி) க்கு ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.



## சிலாங்கூர் 2020 முதல் விளையாட்டு வசதிகளை பராமரிப்பதற்காக

# யூனி30 லட்சத்துக்கும் அதிகமாக செலவிட்டுள்ளது

ஷா ஆலம்:-

2020 ஆம் ஆண்டு முதல் மாநிலத்தில் 79 விளையாட்டு வசதிகளை பராமரிக்க மொத்தம் RM38.97 லட்சமும் , 2020 ஆம் ஆண்டில் 42 விளையாட்டு வசதிகளை உள்ளடக்கிய RM20.08 லட்சமும் செலவிடப் பட்டதாக விளையாட்டு ஆட்சிக்குழு உறுப்பினர் முகமது கைரூடின் ஒத்மான் கூறினார்.அதேசமயம், கடந்த ஆண்டு RM15.12 லட்சம் செலவில் மொத்தம் 29 வசதிகள் பராமரிக்கப்பட்டன.“இந்த ஆண்டு, ஜூன் மாதம் வரை மொத்தம் எட்டு விளையாட்டு வசதிகள் RM375,265 செலவில் பராமரிக்கபட்டுள்ளன” என்று சிலாங்கூர் மாநில சட்டமன்றக் கூட்டத்தில் அவர் கூறினார்.

இளைஞர் மற்றும் விளையாட்டு உள்கட்டமைப்பு மேம்பாடு தொடர்பாக மாநில சட்டமன்ற உறுப்பினர் செமென்தா டாரோயா அல்வியின் எழுத்துப்பூர்வ கேள்விக்கு அவர் பதிலளித்தார்.இருப்பினும் சிலாங்கூர் மாநில விளையாட்டு கவுன்சிலின் மதிப்பீட்டில் இன்னும் விண்ணப்பங்கள் உள்ளன என்று கைரூடின் விளக்கினார்.

## பர்மிங்காம் 2022: தற்போதைய

# விளையாட்டு வீரர்களிடமிருந்து ஆறு தங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது

ஈப்போ:-

பர்மிங்காமில் நடைபெறவிருக்கும் காமன்வெல்த் விளையாட்டுப் போட்டி 2022 இல் தேசிய விளையாட்டு வீரர்களின் தனிப்பட்ட சாதனைகள் மற்றும் தற்போதைய நிலையைக் கருத்தில் கொண்டு மலேசியா ஆறு தங்கப் பதக்கங்களை புதிய இலக்காக நிர்ணயி த்துள்ளது. முன்னதாக, மலேசிய ஒலிம்பிக் கவுன்சில் (ஒசிம்) பேட்மிண்டனில் ஏழு தங்கப் பதக்கங்களையும் (இரண்டு தங்கம்) ரிதம் ஜிம்னாஸ்டிக்ஸ், போலிங், பளு தூக்குதல், ஸ்குவாஷ் மற்றும் பவர் லிஃப்டிங் ஆகியவற்றில் தலா ஒரு தங்கத்தையும் இலக்காகக் கொண்டிருந்தது. இருப்பினும், கார் விபத்தில் காயம டைந்த தேசிய பேட்மிண்டன் ஒற்றையர் சாம்பியன் லீ ஜி ஜியா மற்றும் தேசிய மகளிர் ஸ்குவாஷ் வீராங்கனை எஸ். சிவசங்கரி ஆகியோர் வெளியேறியதைத் தொடர்ந்து இலக்கு மாற்றப்பட்டது. நேற்று, இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சர், டத்தோஸ்ரீ அகமது பைசல் அசுமு, 2022 பர்மிங்காம் காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் ஆறு தங்கப் பதக்கங்களின் புதிய இலக்கை அறிவித்தார், சில தேசிய விளையாட்டு வீரர்களை பாதிக்கும் காரணிகளால் இது யதார்த்தமானது என்று கூறினார். ஷாருல் ஜமான் தலைமையிலான மலேசிய அணி, நான்கு பாரா நிகழ்வுகள் உட்பட 14 விளையாட்டுகளில் போட்டியிடும் 105 தடகள வீரர்களை உள்ளடக்கியது. அவர்கள் இந்த சனிக்கிழமை தொடங்கி படிப்படியாக இங்கிலாந்தின் பர்மிங்காமுக்கு புறப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 2018 காமன்வெல்த் போட்டியில், மலேசியா ஏழு தங்கம், ஐந்து வெள்ளி மற்றும் 12 வெண்கலப் பதக்கங்களை வென்றது.

# சுக்மா 2022 சர்வதேச போட்டிகளுக்கு திறமையான விளையாட்டாளர்களை அடையாளம் காண்பதற்கான தளமாகும்



கோலாலம்பூர் :-

நவம்பர் 1-6 ஆம் தேதிகளில் நடைபெற உள்ள 2022 சுக்மா மலேசியா விளையாட்டுப் போட்டிகள் (பாரா சுக்மா) சர்வதேச அளவில் போட்டியிடும் ஆற்றல் மிக்க விளையாட்டாளர்களை வெளிக்கொணரும் களமாக இருக்கும். 2023 ஆம் ஆண்டு கம்போடியாவில் நடைபெறவுள்ள ஆசியான் பாரா விளையாட்டுப் போட்டிகள், 2022 ஆம் ஆண்டு சீன ஹோங்சூ ஆசிய விளையாட்டுப் போட்டிகள் மற்றும் 2024 ஆம் ஆண்டு பாரிஸ் பாராலிம்பிக்ஸ் ஆகியவற்றில் நாட்டின் சவாலைத் தொடரக்கூடிய போட்டியாளர்களை கண்டறிவது முக்கியம் என்று தேசிய விளையாட்டு கவுன்சில் (என்எஸ்சி) பொது துணை இயக்குநர் (விளையாட்டு மேம்பாட்டுத் துறை) சுஹார்டி அலியாஸ் தெரிவித்துள்ளார். “தங்கப் பதக்கங்கள் மட்டுமின்றி, சிறந்த சாதனைகளைப் படைக்கும் சிறந்த விளையாட்டு வீரர்கள், பாரீஸ் 2024க்குச் செல்ல வேண்டும் என்ற அவர்களின் விருப்பத்தை அடைய அவர்களுக்குப் பயிற்சி அளிக்கும் வகையில், உயர்ந்த நிலைக்கு உயர்த்தப் படுவார்கள் என்று நாங்கள் நம்புகிறோம். 2022 பாரா சுக்மா 100 நாட்கள் தருணங்களை இங்கு அறிமுகப்படுத்திய பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கூறுகையில், அனைத்து தரப்பினரின் வலுவான ஆதரவுடன் 328 நிகழ்வுகள் உட்பட 10 வகையான விளையாட்டுகள் கொண்ட இந்த பாரா சுக்மா திட்டத்தை வெற்றிகரமாக ஏற்பாடு செய்ய முடியும் என்று நாங்கள் நம்புகிறோம்.

ஊனமுற்றோருக்கான விளையாட்டுகளில் மொத்தம் 1,200 விளையாட்டு வீரர்களும் 700 அதிகாரிகளும் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது, ஆனால் போட்டியிடும் விளையாட்டு வீரர்கள் மற்றும் நிகழ்வுகளின் உண்மையான எண்ணிக்கை ஜூலை 31 அன்று பதிவு செய்வதற்கான இறுதித் தேதிக்குப் பிறகு மட்டுமே தீர்மானிக்கப்படும் என்றார்.

இந்த முறை பாரா சுக்மாவில் பங்கேற்பதற்கான வயது வரம்பு 14 முதல் 45 வயதிற்குள் நிர்ணயிக்கப்பட்டுள்ளது, இது அதிக விளையாட்டு வீரர்களை அடையாளம் காண்பதையும், கிராமப்புறங்களில் இருந்து விளையாட்டு வீரர்களை முன்னிலைப் படுத்துவதையும் நோக்கமாகக் கொண்ட மிகவும் நெகிழ்வான இடைவெளியாகும் என்று சுஹார்டி கூறினார்.

முன்னதாக, உலக சாம்பியன்ஷிப் மற்றும் பாராலிம்பிக்ஸில் தங்கப் பதக்கம் வென்ற இரண்டு தடகள சாம்பியன்களான டத்தோ அப்துல் லத்தீஃப் ரோம்லி மற்றும் முகமது ரிட்சுவான் முகமட் பூசி ஆகியோர் சுமார் 100 பாரா விளையாட்டு வீரர்களின் பாரா சுக்மா 100 நாள் தருணத்தை தொடங்கினர்.

# மக்களின் நலன் மற்றும் வாழ்க்கைத் தர மேம்பாட்டுக்கு மாநில அரசு 44 அணுகுமுறைகளை முன்னெடுத்து வருகிறது

ஷா ஆலாம்:-

இந்த மாநிலத்தில் உள்ள மக்களின் வாழ்க்கையை மேம்படுத்த மாநில அரசு 44 திட்டங்களை வழங்குகிறது என்று டத்தோ மந்திரி புசார் கூறினார்.டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி, இந்த அணுகுமுறைகள் அனைத்தும் இல்திஸாம் சிலாங்கூர் பென்யாயாங் (ஐ.எஸ்.பி) என தொகுக்கப்பட்டு, RM60 கோடிக்கும் அதிகமான ஒதுக்கீடும் செய்யப்பட்டுள்ளது.

‘‘2008 இல் ஏழு திட்டங்களுடன் தொடங்கியது, இப்போது இந்த மாநில மக்களின் வாழ்க்கையை மேம்படுத்த 44 திட்டங்களை வழங்குகிறது,’’ என்று அவர் ட்விட்டரில் பகிர்ந்து கொண்டார். இந்த மாநில மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த 11 புதிய திட்டங்களை உள்ளடக்கிய மக்கள் பராமரிப்பு திட்டத்திற்கு பதிலாக கடந்த மாதம் ஐ.எஸ்.பி அறிமுகப்படுத்தப்பட்டது. இதில் இலவச சுகாதார திட்டமான சிலாங்கூர் சாரிங், இல்திஸாம் அனாக் பென்யாயாங், புற்றுநோய் பரிசோதனை மற்றும் சிலாங்கூர் மன ஆரோக்கியம் ஆகியவையும் அடங்கும்.




2008 ஆம் ஆண்டு மாநிலப் பொருளாதாரம் மக்கள் மயம் என்ற கருப்பொருளுடன் ஏழு திட்டங்களுடன் தொடங்கப்பட்ட இந்த முயற்சி, 2017 ஆம் ஆண்டில், 43 நலத் திட்டங்களை உட்படுத்தி, மக்கள் பராமரிப்பு திட்டம் (ஐ.பி.ஆர்) தொடங்கப்பட்டது.

‘‘2019 ஆம் ஆண்டில், மக்களுக்கு அதிக பயனளிக்கும் அம்சங்களுடன் 33 திட்டங்கள் சீரமைத்தோம். அத்துடன் மேலும் 11 திட்டங்களை ஐ.எஸ்.பி யில் சேர்த்துள்ளோம்.எனவே RM 60 கோடிக்கும் அதிகமான பட்ஜெட்டில் 44 திட்டங்கள் மக்களுக்கு வழங்கப்படுகிறது’’ என்று ஜூலை 2 அன்று கோலா சிலாங்கூரில் சிலாங்கூர் பென்யாயாங் திட்டத்தில் உரையாற்றும் போது அவர் கூறினார்.

கடந்த ஜூன் மாத இறுதியில், 30,000 குடும்பங்கள் பயனடையும் கிஸ் எனப்படும் ஸ்மார்ட் சிலாங்கூர் அன்னையர் பரிவுத் திட்டத்திற்கு பதிலாக, சிலாங்கூர் நல்வாழ்வுத் திட்டம் (பிங்காஸ்) தொடங்கப்பட்டது.

# மக்கள் கல்வி வகுப்பு 25,000க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு பயனளிக்கிறது

கோம்பாக்:-

இந்த ஆண்டு சிலாங்கூர் மக்கள் கல்வித் திட்டத்தின் பிரத்தியோக வகுப்புகள் (PTRS) தொடக்கப் பள்ளி மாணவர்களுக்கு விரிவுபடுத்தபட்டதை அடுத்து, 25,000க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு அது பயனளிக்கிறது.கூடுதல் வகுப்பு உதவி தவிர, மாணவர்களின் வசதிக்காக மதிய உணவுக்கான செலவுக்கும் சிலாங்கூர் மந்திரி புசார் (இணைப்பு) அல்லது எம்பிஐ நிதியளித்ததாக டத்தோ மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.‘‘அனைத்து நான்கு மற்றும் ஐந்தாம் வகுப்பு மாணவர்களுக்கு கூடுதல் வகுப்பு உதவி மற்றும் பயிற்சிகள் வழங்கப்படாவிட்டால், கல்வியில் தோல்வி அடையும் அபாயம் இருப்பதாக கணிக்கப் படுகிறது. ‘‘எனவே PTRS மூலம், மலேசிய கல்விச் சான்றிதழை (எஸ்பிஎம்) பெற அவர்களுக்கு உதவலாம். அவர்கள் திட்டத்தை சரியாகப் பின்பற்றினால், சிறந்த தேர்வு முடிவுகளை அடைய முடியும்,’’ என்று அவர் கூறினார். “முழுமையான கல்வி, சிறந்த இளம் தலைமுறை உருவாக்கத்திற்கு” என்ற கருப்பொருளுடன் சிலாங்கூர் பென்யாயாங் திட்டத்தை கோம்பாக்கிலுள்ள பத்து கேவ்ஸ் பொது தளத்தில் இன்று ஆரம்பித்து வைத்த பின்னர் செய்தியாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு கூறினார்.

நவம்பர் 26 அன்று சிலாங்கூர் பட்ஜெட் 2022 ஐ அமிருடின் சமர்ப்பித்த போது, இந்த ஆண்டு PTRS க்காக RM70 லட்சம் ஒதுக்கப்படுவதாக அறிவித்தார். மற்றவற்றுடன், ePTRS.my போர்ட்டலின் நிரப்புதலை வலுப்படுத்தவும், ஆசிரியர்களின் திறன்களை வலுப்படுத்தவும் ஒதுக்கீடு செய்யப்படுகிறது



# சிலாங்கூர் அரசின் இலவச இணையத் தரவு சேவையின் வழி 30,000 பேர் பயன்

கோம்பாக்:-

மாநிலத்தில் இளங்கலை பட்டதாரிகள் உட்பட 30,000க்கும் மேற்பட்ட மாணவர்கள் ஒரு வருடத்திற்கான இலவச இணையத் தரவு சேவையைப் பெறுவதாக மந்திரி புசார் கூறினார். தொலைத் தொடர்பு வசதிகளில் இடையூறின்றி மாணவர்கள் தங்கள் பாடங்களை மீள்பார்வை செய்ய இந்த இலவச இணையத் தரவு சேவைத் திட்டம் உதவுகிறது என்று டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார். மாணவர்களுக்கு 12 மாதங்களுக்கு இலவச இணையத் தரவு சேவையை வழங்கக்கூடிய 30,000 க்கும் மேற்பட்ட இலவச சிம் கார்டுகளை மாநில அரசு ஒதுக்கியுள்ளதாகக் கூறிய அவர், அக்கார்டுகள் அனைத்தும் விநியோகிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டுவிட்டன என்றார்.

இந்த ஓராண்டு காலத்திற்கு அவர்கள் இலவச இணையச் சேவையைப் பயன்படுத்தலாம். இந்த சிறப்பாக இருந்தால் இத்திட்டத்தைத் தொடரும் அதேவேளையில் அதனை மேம்படுத்துவோம் என்று அவர் கூறினார். நேற்று, கோம்பாக்கில் உள்ள பத்து கேவ்ஸ் பொது மைதானத்தில் ஜெலாஜா சிலாங்கூர் பென்யாயாங் நிகழ்வைத் தொடக்கி வைத்தபின்னர் செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்தார். மொத்தம் ஒரு கோடியே 70 லட்சம் வெள்ளி ஒதுக்கீட்டில் மாநிலத்தில் 70,000 பேருக்கு 12 மாதங்களுக்கு இலவச சிம் கார்டுகள் மற்றும் இணைய தரவு சேவை வழங்கப்படும் என்று அமிருடின் கடந்த ஆண்டு ஆகஸ்ட் 4 ஆம் தேதி அறிவித்திருந்தார்.

# தனித்து வாழும் தாய்மார்கள் நலன் காக்கும் கிளப் அனைத்து தொகுதிகளிலும் உருவாக்கப்படும்



ஷா ஆலம்:-

மாநிலத்திலுள்ள அனைத்து தொகுதிகளிலும் தனித்து வாழும் தாய்மார்கள் கிளப் அமைக்கப்படவுள்ளது. அடிப்படை நடவடிக்கைகளை மேற்கொள்வது, தரவுகளைச் சேகரிப்பது மற்றும் ஒருங்கமைப்பை உருவாக்குவது ஆகிய நோக்கங்களுக்காக தொடக்க நிதியாக 1,500 வெள்ளியுடன் இந்த கிளப் தொடங்கப்படும். மாநிலத்தில் தனித்து வாழும் தாய்மார்கள் யாரும் விடுபடாமலிருப்பதை உறுதி செய்யும் நோக்கிலான இத்திட்டம் குறித்த அறிவிப்பு கடந்த வாரம் நடைபெற்ற ஜெலாஜா சிலாங்கூர் பென்யாயாங் திட்டத்தின் போது வெளியிடப்பட்டதாக மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

சொந்தமாக நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்ய விரும்பும் தனித்து வாழும் தாய்மார்கள் சங்கங்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுவதாக கூறிய அவர், செப்டம்பர் முதல் தேதி தொடங்கி அக்டோபர் 30 ஆம் தேதி வரை இதற்கான விண்ணப்பத்தை அனுப்பலாம் என்றார்.

தனித்து வாழும் தாய்மார்களுக்கு உதவுவதற்காக சிலாங்கூர் மகளிர் ஆக்கத்திறனளிப்பு அமைப்புக்கு (டபள்யு.பி.எஸ்.) 100,000 வெள்ளி கூடுதல் மானியம் வழங்கப்படுவது தொடர்பான அறிவிப்பு கடந்த வாரம் நடைபெற்ற ஜெலாஜா சிலாங்கூர் பென்யாயாங் நிகழ்வின் போது வெளியிடப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

வாழ்க்கையையும் பொருளாதாரத்தை செம்மையாக வழிநடத்தும் வகையில் அந்த தரப்பினரின் ஆற்றலை மேம்படுத்துவதற்காக இந்த மானியம் வழங்கப்படுகிறது என்று அவர் தனது பேஸ்புக் பதிவில் குறிப்பிட்டார்.

மேம்பாட்டுத் திட்டங்கள் வாயிலாக தனித்து வாழும் தாய்மார்களின் நிலையை உயர்த்தும் மாநில அரசின் நோக்கத்திற்கேற்ப இந்த கிளப் தொடங்கப்படுவதாக சிலாங்கூர் மகளிர் ஆக்கத்திறனளிப்பு பிரிவின் தலைமை செயல்முறை அதிகாரி சித்தி கமாரியா கடந்த 24 ஆம் தேதி கூறியிருந்தார்.

Diterbitkan oleh **Media Selangor Sdn Bhd** (Sebelumnya dikenali **Communication Sdn Bhd**), Aras 11, Menara Bank Rakat, No1, Jalan Indah 14/8, Seksyen 14, 40000 Shah Alam, Selangor.
Dicetak oleh **Ultimate Print Sdn Bhd** Lot 2, Jalan Sepana 15/3, off persiaran Selangor Seksyen 15, 40200 Shah Alam, Selangor.